
www.padippakam.com

# காலம்

2

மார்ச் 1991



படிப்பகம்

www.padippakam.com

இதழ் இரண்டு
மார்ச் 1991

# காலம் 2

○ ○ ○

ஆசிரியர்:
செல்வம்

இணையாசிரியர் :
ஆனந்த பிரசாத்

○ ○ ○

வெளியிடுபவர் :

K. V. Moorthy
711 Kennedy Road 209
Scarboro
Toronto
CANADA

KAALAM
P. O. Box 44531
2376 Eglinton Ave., East
Scarborough, Ont., M1K 5K3
Canada

○ ○ ○

பிரான்ஸ் தொடர்பு முகவரி :

S. Sabalingam
3 Alle Paul Leautaud
95200 Sarcelles
FRANCE

○ ○ ○

இலங்கை தொடர்பு முகவரி :

Parthasarathy
40 Hamden Lane
Colombo-6.
Sri Lanka

○ ○ ○

இந்தியா தொடர்பு முகவரி :

VAYAL
*Publishers & Book Sellers*
5 Kutchery Lane
Mylapore
Madras-600 004
S. India

காலம்—2 ஆம் இதழ் வெகு தாமதமாக வெளிவருகிறது. ஆர்வம் — செயல்வடிவம் இரண்டுக்குமிடையே எவ்வளவோ மேடு பள்ளங்கள். எனினும் இனி இதழ் தொடர்ந்து வெளிவருவதற்கான நடைமுறைகள் சீர் செய்யப்பட்டுள்ளன.

1991 ஆம் ஆண்டு முடிவிற்குள் 'காலம்' ஆறு இதழ்கள் வெளிவந்திருக்கும்.

முதல் இதழ் வாசகர்களிடம் உரிய கவனிப்பைப் பெற்றிருப்பது உற்சாகம் தருகிறது. படைப்புகளை 'வெளியிடுபவர்' முகவரிக்கோ 'வயல்' முகவரிக்கோ அனுப்பலாம்.

இதழ் பற்றி எழுதுங்கள்.

தங்கள்—

செல்வம்

www.padippakam.com

# ஜி. அரவிந்தன்

அரவிந்தனின் கலை பன்முகத் தன்மை கொண்டது. தனது கலைக்கு மலையாள மொழியையும், கேரள வாழ்க்கையின் அனுபவங்களையும் ஆதாரமாகக் கொள்கிறார். எனினும் இப் படைப்புகள் அவற்றின் வரையறைகளைப் பிளந்து பிரபஞ்சரீதியான, காலங் கடந்த தன்மைகளைப் பெறுகின்றன. சிறு புள்ளியில் தொடங்கும் அவரது கலை, பரந்த திரையாக நீட்சி பெற்று, யதார்த்தத்தின் பல கோணங்களைத் தழுவி மனித உண்மையின் வெளிப்பாடாக நிலைக்கிறது.

வாழ்வியல் யதார்த்தங்களின் வெவ்வேறு நிலைகளை அரவிந்தனின் படங்கள் மையப் பொருளாகக் கொண்டிருக்கின்றன. முதல் படமான 'உத்தராயணம்' இந்திய விடுதலைக்குப் பின் சமூக வாழ்க்கையில் நேர்ந்த மதிப்பீடுகளின் சிதைவையும், புதிய தலைமுறையின் மௌனக் குமுறலையும் சித்தரிக்கிறது. சர்க்கஸ் என்ற புறக்கவர்ச்சி நிறைந்த சாதனத்தின் பின்னுள்ள நிஜ வாழ்க்கையின் கண்ணீரையும் புன்னகைகளையும் 'தம்பு' வெளிப்படுத்துகிறது. 'கும்மாட்டி' குழந்தைகள் மனதில் காலங்காலமாக உயிர்த்திருக்கும் ஒருவிநோதக்கதை. ஒரு கிறிஸ்துவச் சிந்தனை குறித்து மனிதர்களிடையில் நிலவும் ஆதரவான, எதிர்மறையான கருத்துக்களுக்கிடையில் அவன் ஒரு புராணிகமாக—myth ஆக—நிலை பெறுவதை 'எஸ்தப்பான்' மையக் கருவாகக் கொண்டிருக்கிறது. 'போக்கு வெயில்' மென்மையான உணர்வுகள் கொண்ட ஒருவன் நடைமுறை யதார்த்தங்களின் கூர்மையால் கிழிக்கப்பட்டு மன நிலை பிறழ்வதைச் சித்தரிக்கிறது.

ஒரு கிராமத்தில் மின்சாரம் நுழைவதும் அதைத் தொடர்ந்து அந்த கிராம வாழ்க்கையின் முகம் மாறுவதும் 'ஒரிடத்து' படத்தின் மையப் பொருள். கதகளி கலையைப் பின்னணியாகக் கொண்ட 'மாருட்டம்' மனித இருமை பற்றிய பிரச்னையைக் கேள்விக்குட் படுத்துகிறது. சமீபத்திய படமான 'வாஸ்து ஹாரா' அகதிகளின் பிரச்சனையைப் பற்றிச் சித்தரிக்கிறது.

இவை யாவும் ஒரே கலைஞனின் படைப்புகள் என்ற விதத்தில் ஒருமை கொண்டவை. ஆனால் வெவ்வேறு மையங்களிலிருந்து உருவானவை. மையப் பொருளின் கோரிக்கைக்கு ஏற்ப வெவ்வேறு உருவங்களையும், திரைப்பட நடையையும் மேற்கொள்கின்றன. வேறு வேறு தளங்களில் வெளிப்படுகின்றன.

சென்ற மார்ச் மாதம் அரவிந்தன் காலமடைந்தார். மலையாளப் பட உலகில் ஒரு விமர்சனம் உண்டு. ''ஒரு அரவிந்தனோ, ஒரு அடூர் கோபாலகிருஷ்ணனோ ஒரு வருடம் படமெடுக்கவில்லை என்றால் சிறந்த மலையாளப் படங்கள் பட்டியல் காலியாக இருக்கும்.'' உண்மை. உலக அரங்கில் மலையாளப் படங்களுக்கும் அதன் மூலம் இந்தியத் திரைப்படங்களுக்கும் அங்கீகாரம் பெற்றுத் தந்த ஓர் மௌன ஆளுமை நிலைத்த மௌனத்தில் ஆழ்ந்து விட்டது.

**மத்யமாவதி**

### திரைப்படங்கள்

| | |
|---|---|
| உத்தராயணம் | (1974) |
| காஞ்சன சீதா | (1977) |
| தம்பு | (1978) |
| கும்மாட்டி | (1978) |
| எஸ்தப்பான் | (1979) |
| போக்குவெயில் | (1981) |
| சிதம்பரம் | (1985) |
| ஒரிடத்து | (1987) |
| மாருட்டம் | (1988) |
| வாஸ்துஹாரா | (1990) |

www.padippakam.com



# முகாமுகம்

மொழி : மலையாளம்

இயக்குநர் : அடூர் கோபாலகிருஷ்ணன்

ஐம்பதுகளில் கேரளாவில் ஆதிக்கம் பெற்றிருந்த இந்திய கம்யூனிஸ்ட் கட்சி பின்பு தனது புரட்சிகர குணாம்சங்களை இழந்து இந்திய மார்க்ஸிஸ்ட் கட்சியாக மாறியது. அதைத் தொடர்ந்து இந்திய கம்யூனிஸ்ட் இயக்கத்துள் பல்வேறு போக்குகள் தொடர்ந்தன. இந்தக் காலக் கட்டத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தீவிர தொழில் சங்க இயக்குனராக வாழ்ந்த ஒருவரின் முற்பகுதி, பிற் பகுதி வாழ்க்கையினை சித்தரிக்கிறது இப்படம்.

ஒரு ஓட்டுத் தொழிற் சாலையின் வேலை நிறுத்தத்துடன் கதை ஆரம்பமாகின்றது. தொழிற் சாலை நிர்வாகம் தொழிலாளரின் கோரிக்கையைப் புறக்கணித்து வேலை நிறுத்தத்திற்கு முக்கிய காரணரான இந்தக் கம்யூனிஸ்ட் இயக்குனரை அடியாட்கள் வைத்து தாக்குகின்றது. பதிலுக்கு இவர் தொழிற்சாலை முதலாளியைக் கொலை செய்து விட்டு தலைமறைவாகின்றார். சுமார் பத்து வருடங்களின் பின் தனது வீட்டுக்கு வருகின்றார். இப்போது இவர் நல்ல"குடிகாரர். எப்போதும் வெறி. வாழ்க்கையில் எதுவித பற்றும் இல்லாமல் ஒரு வகை சுய அழிவு குணாம்சத்தைக் கொண்டவராக மாறியுள்ளார். இந்த நிலையில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தன் புரட்சிகர குணாம்சங்களை இழந்து திரிபுவாத கட்சியாக மாற ஆயத்தங்கள் செய்து கொண்டிருக்கின்றது.

ஒரு நீண்டகால இயக்குனர் என்ற வகையில் இவரும் அவர்கள் தீர்மானத்திற்கு "கையெழுத்திடும்படி கேட்கப்படுகின்றார். இவருக்குத்தான் இப்போ எதிலும் பற்றில்லையே. குடிக்காக இவர் தீர்மானத்திற்கு கையெழுத்திட்டு விட்டு வருகின்றார். அப்போது இவரிடம் சிறுவனாக அரசியல் பயின்று இவரிடம் நம்பிக்கையும் மதிப்பும் வைத்திருந்த அந்த புதிய தலைமுறை இளைஞனால் கொல்லப் "படுகின்றார். கட்சி உடனே இவரை தியாகியாக்கி ஊர்வலம் வைத்து தன்னை வளர்த்துக் கொள்கின்றது.

அடூர் கோபாலகிருஷ்ணனின் படங்கள் அநேகமாக தனிமனிதனின் உள்மன உணர்வை விசாரணை செய்வதாகவே அமைகின்றன. இப்படமும் அந்தக் கருத்தைக் கொண்டதாகவே அமைந்தாலும் தேர்ந்தெடுக்கப்பட்ட விடயமும் பாத்திரமும் சற்று வித்தியாசமானதும் ஆழமானதுமாகும்.

இப்படத்தில் இரு விடயங்கள் ஆராயப்படுகின்றன. கட்சியை முழுமையாக நம்பித் தனது சுயநல வாழ்வைத் துறந்து சமூக மாற்றத்திற்காக புறப்பட்டவர், கட்சி திரிபுவாதபோக்கிற்கு திரும்பும்போது எதுவுமே இல்லாமல் வெறுமைக்குத் தள்ளப்படுகின்றார். பின்பு அவருக்கே அவருடைய மிகுதி வாழ்க்கை பிரச்சனையாகி விடுகின்றது. அடுத்தடுத்து மனதுள் இயல்பாக எழும் உணர்வுகளை கட்சியிடமும் மக்களிடமும் தான் மதிப்புடன் இருக்க வேண்டும் என்பதற்காகக் கட்டுப் படுத்திக் கொள்கின்றார். இந்தப் பலவந்தமான கட்டுப்பாடு மனது சோர்வடையும் போது தள்ளாடும் போது எல்லாவற்றையும் உடைத்துக் கொண்டு கிளம்புகின்றது. இதற்கான தரவுகள் படத்தில் காட்டப்படுகின்றன.

இவருக்கு ஏற்கனவே குடிபழக்கம் இலேசாக உண்டு. இதை வெளியுலகிற்கு மறைக்கின்றார். அதேபோல் இவருக்கு விருப்பம் இருந்தும் இவரைக் காதலித்த அரசியல் ஈடுபாடுள்ள அந்தப் பெண்ணை ஆரம்பத்தில் புறக்கணிக்கின்றார். ஆனால் வேறொரு இடத்தில் இவர் காயப்பட்டிருக்கும்போது உதவி செய்யும் சாதாரண பெண்ணை விரும்பி மணந்து கொள்கின்றார். அதன் பின்பு இந்தப் பெண்ணையும் கர்ப்பிணியான நிலையில் விட்டு தலை மறைவாகி விட்ட நிலையில் வேறொரு பெண்ணில் சிநேகமும் உருவாகி விடுகின்றது. மூன்று பெண்களுடன் தொடர்பு இருந்தும் ஒரு பெண்ணுடனும் ஒழுங்கான குடும்ப வாழ்வு இருக்கவில்லை. தந்தையின் அன்புக்காக மகன்

www.padippakam.com



ஏங்கும் போது இவரோ அது பற்றி எந்த சலனமும் இல்லாமல் குடியிலே மூழ்கின்றார்.

இப்படத்தை எடுத்த எடுப்பிலேயே ஒரு கம்யூனிஸ எதிர்ப்பு படம் என்று சிலர் கூறிவிடக் கூடும். ஆனால் அப்படியல்ல. கம்யூனிசம்பற்றிய கொள்கைகள் எதுவுமே இங்கு விமர்சிக்கப்படவில்லை. இந்த இயக்குனர் போன்ற பாத்திரங்கள் இன்னும் நம் மத்தியில் வாழ்கின்றன. அரசியல் இயக்கத்தில் ஈடுபாடுள்ளவர்கள் பலர் இத்தகைய பாத்திரங்களை நிச்சயம் தங்கள் வாழ்வில் சந்தித்திருப்பார்கள். ஆனால் அவர்களின் மன உணர்வுகளையும் போக்குகளையும் பற்றி ஆழமாகச் சிந்தித்திருக்க மாட்டார்கள். இப்படம் அத்தகைய ஒரு நபரின் உளவியல் போக்கை விசாரணை செய்கின்றது.

படம் கலையம்சத்துடன் எடுக்கப்பட்டிருக்கின்றது. கம்யூனிஸ் இயக்குனராக (கங்கா) நடித்தவர் பாத்திரத்தின் தன்மையை நன்றாகப் புரிந்து நடித்திருக்கின்றார். உரையாடல்களுக்கு முக்கியத்துவம் இல்லாமல் சம்பவங்களினால் கதை நன்றாக கொண்டு செல்லப்படுகின்றது. அடூர் கோபால கிருஷ்ணனின் திறமையைப் பற்றி அதிகமாக வியக்க வைக்கிறது இப்படம்.

●●●

சுமார் நான்கு ஐந்து வருடங்களுக்கு முன் வெளிவந்த இப்படம் இப்போது Torontoவில் V.D.O. வில் கிடைக்கக் கூடியதாக இருக்கின்றது. இவ்விமர்சனம் கிருஸ்ண குமார் என்பவரால் அலை (27) இல் எழுதப்பட்டது.

இப்படம் Toronto வில் கிடைக்கும் முகவரி :
RUBAN V D O CENTER
31 St Denis Drive Apt. 826
Toronto

●●●

---

**'தமிழியல்'**
புதிய வெளியீடு

●

## 'யதார்த்தமும் ஆத்மார்த்தமும்'

*மு. பொன்னம்பலத்தின் கட்டுரைத் தொகுதி*

●

பத்து கட்டுரைகள்; 160 பக்கங்கள்;
விலை : ரூ. 22-00

●

கிடைக்குமிடம்

**வயல்**

5 கச்சேரி சந்து
மயிலாப்பூர்
சென்னை 600 004
தென் இந்தியா

படிப்பகம்

www.padippakam.com



# இலங்கை கிராமியப் பொருளாதாரத்தின் நெருக்கடிகள்

மூலம் : சரத் பர்ணாந்து

தமிழாக்கம் : செ. லோகநாதன்

ஜனாதிபதியின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் விசேட பணி சபைமூலம் முதல் ஆறு மாத காலத்துள் திட்டமிடப்பட்டு அடுத்து ஆறுமாத காலத்துள் பூர்த்தி செய்யக் கூடியவாறு, நாட்டின் காணியற்ற வறிய மக்களுக்கு விவசாயம் செய்வதற்கு எனவும், குடியிருப்புக் கெனவும், அரசுக்குச் சொந்தமான காணிகளைப் பங்கீடு செய்வதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடுவதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது. சுமார் ஐந்து இலட்சம் ஏக்கர் காணிகள், சுமார் பத்து இலட்சம் வலிய மக்கள் மத்தியிலே உடனடியாகப் பங்கீடு செய்யப்படல் வேண்டுமென இச் சபை சிபார்சு செய்துள்ளது. பங்கீடு செய்யப்படவுள்ள காணிகளுக்கான நில அளவை வேலைகளும் மதிப்பீடுகளும் தகமை உடையோரிடமிருந்து விண்ணப்பம் கோருதலும் ஆரம்பமாகியுள்ளன எனவும் கூறப்படுகிறது.

அத்துடன் பெருந்தோட்ட பயிர்ச் செய்கைக்கு பொருத்தமற்ற தோட்டப்பகுதிக் காணிகளில் சுமார் 35 000 ஏக்கர் நிலம் தோட்டத் தொழிலாளர்கள், காணிகளை இழந்த கிராமிய மக்கள் மத்தியில் பங்கீடு செய்வதாகவும், காணிச் சீர்திருத்த ஆணைக் குழுவின் கீழ் உள்ள குத்தகை விவசாய நிலம் 17,832 ஏக்கருக்கான உரிமையை குத்தகை விவசாயிகளுக்கு வழங்கவும், வணிகப் பயிர்ச் செய்கைக்கென பெரும் கம்பனிகளுக்கு காணிகளை வழங்குவதற்குப் பதிலாக கம்பனிக்குப் புறம்பாக இருந்து பயிர்செய்வோர் (கம்பனிகளுக்கு அவசியமான உற்பத்திகளை) என்னும் ரீதியில், துண்டு துண்டாக காணிகளை விவசாயிகளுக்கே வழங்கவும், சரியான முறையில் பயன்படுத்தப் படாத காணிகளை அரசாங்கம் கையேற்று அவற்றை விவசாயிகளுக்குக் குத்தகைக்குக் கொடுக்கவும், உற்பத்திக்கு அவசியமான விஸ்தரிப்புச் சேவைகள், பயன் படுத்தும் பொருட்கள், கடன் மற்றும் உதவிகள், இவை அனைத்தும் ஒருங்கிணைக்கப்பட்ட சேவை செயல்திட்டம் மூலம் வழங்கவும், தமது விருப்பின் பேரில் அரசுக்குக் கையளிக்கப்படும் காணிகளுக்கு நட்ட ஈடு வழங்கி அவற்றைக் கையேற்று பங்கீடு செய்தல் ஆகிய பல பிரேரணைகள் இச் சபையால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

எமது நாட்டு மக்கள், விசேடமாக கிராமிய மக்கள் மிகப் பாரிய நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்கின்றனர் என்பதனை அரசுக்குக் கூட அங்கீரிக்க நேர்ந்துள்ளதையே, இத் துரித நடவடிக்கைகளும், குறைந்தவருமானம் பெறுபவர்களுக்கான 'ஜனசவிய' போன்ற திட்டங்களும் எமக்கு எடுத்துக் காட்டுகின்றன.

இத்திட்டங்களும் துரித நடவடிக்கைகளும் 1977ல் பதவிக்கு வந்த ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கத்தால் முன் வைக்கப்பட்ட பொருளாதார அபிவிருத்தி திட்டங்களில் உள்ளடக்கப்பட்டவை அல்ல. இவ் அரசாங்கத்தால் பொருளாதார அபிவிருத்திக்கு மேற்கொள்ளப்பட வேண்டியவை எனக் கூறப்பட்டவற்றுக்கும் இவற்றுக்கு மிடையே எவ்வித் தொடர்பும் இல்லை. நாட்டில் கூர்மையடைந்து வந்த பொருளாதார நெருக்கடிகளும், குறிப்பாக எமது கிராமிய சமுதாயத்தில் மிக நீண்டகாலம் தொடக்கம் கோரமாக வளர்ந்த வறுமையும், முழுச் சமூகத்தையும் தகர்த்தெறிந்து குளறுபடிக்குள்ளாக்கியதும் முழு நாட்டையும் பயமுறுத்தியதுமான கொடூர கிளர்ச்சி நிலமை தோன்றுவதற்கான காரணிகளையும் விளங்கிக் கொண்டது, இத்துரித நடவடிக்கைகளை நோக்கி அரசு தூண்டப்பட்டதற்கான காரணமாக விடுக்கலாம்.

1971ல் கூட கூடுதலாக கிராமப் புறங்களில் தோன்றிய இளைஞர் கிளர்ச்சி, அவசர அவசரமாக நிலச் சீர்திருத்தம் ஒன்றைச் செயல்படுத்த அன்றைய அரசாங்கத்தை தூண்டுமளவிற்கு வெற்றி கண்டது. அன்றும் இன்றும் கூட இளைஞர் கிளர்ச்சியால் நிலச் சீர்திருத்தத்திற்கான கோரிக்கை திட்டவட்டமாக அறிவிக்கப்

www.padippakam.com

படாவிடினும் கூட சில இளைஞர்கள் அடிப்படை மாற்றத்தை வேண்டி நிற்கும் நிலமைக்கு தூண்டப்படுவதற்கான மட்டத்தில் உக்கிர பொருளாதார நெருக்கடிகள் நிலவின என ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

1971 கிளர்ச்சியில் ஈடுபடாத வடகிழக்கு பிரதேசங்களைச் சார்ந்த தமிழ் இளைஞர்கள் 1976 காலகட்டத்தில் ஆயுத போராட்டத்தில் குதிப்பதற்கும், 1983 இல் இருந்து உக்கிரம் அடைந்த இப் போராட்டம் இன்னும் தீர்க்கப் படாத நீண்ட யுத்தமாக வளர்வதற்குமான காரணங்களை கவனமாக பரிசீலனை செய்து பார்க்கும் ஒருவரால், கிராமிய பொருளாதாரத்தில் ஏற்பட்ட பாரதூர நெருக்கடியும் இவ் இளைஞர்கள் கிளர்ச்சியை நோக்கித் தூண்டப் படுவதற்கான பிரதான காரணங்களில் ஒன்று என்பதைக் காண முடியும். கிராமியப் பொருளாதாரத்தின் பெரும் பிரச்சனைகளான நிலப் பற்றாக்குறை, வேலை இல்லாத் திண்டாட்டம், வறுமை வடகிழக்குப் பிரதேசங்களிலும் வளர்ச்சி பெற்றது. தமிழ் மக்களுக்கு நீண்டகாலமாக இழைக்கப்பட்ட அநியாயங்களுக்கும், இன ரீதியில் தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட அடக்கு முறைகளுக்கும் எதிராக நடத்திய சாத்வீகப் போராட்டங்களை தனிநாட்டுக்கான பெரும் யுத்தமாக மாற்றியது; கிராமியப் பொருளாதாரப் பிரச்சனைகளை தீர்ப்பதற்கான பாதையாக நிலவிய தொழில்களைப் பெறுதலிலும் கல்வி வாய்ப்புக்களிலும் ஏற்பட்ட தடையும் போதாமையுமே யாகும்.

1971ல் நாடு பூராவும், 1976 தொடக்கம் இன்று வரை வடகிழக்கு மாகாணங்களிலும், 1988—1989ல் தெற்கில் சகல மாவட்டங்களிலும் ஏற்பட்ட உயிர் இழப்புக்கள்; அனாதைகளாகிய இலட்சக்கணக்கான குடும்பங்கள்; பொருட்சேதம்; முழுச் சமுதாயத்தையும் பற்றிக் கொண்ட யுத்த மனோபாவம்; எந்த ஒருவரது உயிருக்கும் பாதுகாப்பு இல்லை என்னும் நிலமை—இவைகள் இப் பிரச்னையின் பாரதூர தாக்கத்தை தெளிவு படுத்துகின்றன. தமக்கும் சமூகத்துக்கும் பெரும் அழிவை ஏற்படுத்துகின்ற செயல் முறைகளுக்கு இவ்வளவு பெருந் தொகையான இளைஞர்கள் உந்தப்பட்டது அவர்களைச் சூழ்ந்து கொண்டுள்ள நெருக்கடிகளினாலேயாகும். இந் நெருக்கடிகளுக்கான தாக்கத்தை ஏற்படுத்திய அனேக காரணிகள் நிலவின என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. மிக நீண்ட காலமாக விருத்தி பெற்றதும் பெரும் உயிர் அழிவுகளுக்கு காரணமுமான நெருக்கடிகள் நிலவும் சமூக அமைப்புக்கு அவசியமான ஆழமான சீர்திருத்தங்கள் பற்றி சரியான உரையாடல்கள் ஏற்படாமை இன்று நாம் முகங்கொடுக்கும் துயர் நிலையாகும். யுத்தம் மூலம் வெற்றி பெற முடியாத போது—இந்திய—இலங்கை உடன்படிக்கை, சமாதானப் படை, மாகாண சபை; தேர்தலில் வெற்றி பெற வேண்டும்போது—ஏழ்மையை இல்லா தொழிக்கும் 'ஜன சவிய'; தெற்கில் கிளர்ச்சி வளரும் போது — உடனடியாக இந்தியப் படைகளை வெளியேற்றும் வாக்குறுதி, எதிர்க் கட்சிகளால் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை இல்லாமல் செய்தல்; சுதந்திரமான தேர்தல் பற்றி முன்மொழியும் போது — சர்வகட்சி மாநாடு; கிளர்ச்சியில் தலைவர்கள் இறந்ததன் பின்னர் பேச்சு வார்த்தைக்காக விடுக்கப்பட்ட அழைப்பு நிறுத்தப்படுவதையும், சரணடைய விரும்புவர்களுக்குக் கூட உயிர் பற்றிய உத்தரவாதத்துடன் சரணடைய இடமளிக்காமை ஆகிய நடவடிக்கைகளையும் காணும்போது தெரிவது நெருக்கடிகளுக்கான உண்மைக் காரணங்களைத் தேடி நிலையான தீர்வுக்கான ஆழமான சீர்திருத்தங்களைச் செய்வது அல்ல, அவ்வப் போது ஏற்படும் தடைகளைத் தள்ளி வைப்பதும் அல்லது அவற்றிலிருந்து விலகியும் முன்னர் சென்ற பாதையிலேயே தொடர்ந்தும் பயணம் செய்வதற்கான முயற்சியேயாகும்.

அண்மையில் வெளியான செந்நிற அட்டையுடன் கூடிய 'ஆர்த்திக விமசும' சஞ்சிகையில் ('பொருளியல் நோக்கு சஞ்சிகையின் சகோதர சிங்கள சஞ்சிகை', 'காணிப் பங்கீடு உண்மையிலேயே ஒரு மௌனப் புரட்சி' என அறிமுகப் படுத்தப்பட்டிருந்தது. இவ்வளவு பெரும் உயிர் அழிவுகளுக்கும் சமூக நெருக்கடிகளுக்கும் காரணமான பிரச்சனைகளுக்கு பரிகாரம் காண வேண்டுமாயின் நெருக்கடிகளுக்கான அடிப்படை காரணங்களை விளங்கிக் கொண்டு அவற்றை இல்லாதொழிக்கும் புரட்சிகர மாற்றமாக இருக்க வேண்டும். இக்காணிப் பங்கீடு அரசியல் தலையீடு, வேறு ஊழல்கள் ஏதுமின்றி தகமை உடையோர் மத்தியிலிருந்து தெரிவு செய்யப்பட்டாலும் கூட, பெரும் கிளர்ச்சிகளை நோக்கி இளைஞர்களைத் தள்ளிய விவசாய

www.padippakam.com



நெருக்கடிகளுக்கு பரிகாரம் ஆகலாம் என எண்ண முடியாது.

கடந்த 12 வருட காலமாக கடைப்பிடிக்கப்பட்டு வந்த விவசாய பொருளாதாரக் கொள்கைகளால் கிராமப்புற விவசாய மக்களின் வறுமை மென்மேலும் அதிகரித்ததைக் காண முடிகிறது. இலங்கை கிராமிய சமுதாயத்தில் விவசாயம் மூலம் வாழ்க்கை நடத்தும் பெரும்பாலான மக்கள் ஒன்றில் தமது சிறிய காலணிகளில் விவசாயம் செய்கின்றனர் அல்லது குத்தகைக்கு விவசாயம் செய்யும் விவசாயிகள் ஆவர்; அல்லது அரசுக்கு சொந்தமான காணிகளில் விவசாயம் செய்யும் அத்து மீறிய விவசாயிகள் ஆவர். மிக நீண்ட காலம் தொடக்கம் இத்தகைய சிறு அளவிலான விவசாய முறையே இலங்கையில் நிலவியது. அவர்களிடம் பெருமளவில் மூலதனம் இருக்கவில்லை. ஆதலால் மத்திய அரசாங்கத்தால் நீர்ப்பாசன வசதிகள் செய்து கொடுக்கப்பட்ட அல்லது குடியேற்றத் திட்டங்கள் மூலம் கிடைத்த விவசாயம் செய்யக் கூடிய சிறிய காணிகளில் குறைந்த செலவில் விவசாயம் செய்ய அவர்களில் பெரும் பகுதியினர் பழக்கப்பட்டுள்ளனர்.

1960 காலகட்டத்திலிருந்து ஆரம்பமான அதிக அறுவடையை வழங்கும் விதைநெல் பாவனைக்கு விவசாயிகளைப் பழக்குவிப்பதற்காக, அவர்களுக்கு இலகுவான முறையில் கடன் வழங்கல், பசளை மானியம், இலவச நீர் வினியோகம், விவசாய உற்பத்திகளுக்கு ஓரளவிற்காவது நியாய விலை வழங்க வேண்டும் என்பதற்காக ''உத்தர வாத விலைத் திட்டம்'' மற்றும் எமது விவசாயிகள் உற்பத்தி செய்யும் பொருட்கள் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்தலை மட்டுப்படுத்தல், நிலம் அற்றோருக்கு குடியேற்றத் திட்டங்கள் மூலம் காணி வழங்குதல் போன்ற நலன்புரி வேலைகள் கடைப்பிடிக்கப்பட்டன. குத்தகை விவசாயிகளைப் பாதுகாக்கும் நோக்குடன் நெற்காணிச் சட்டம் போன்றவை அமுல் படுத்தப்பட்டன.

விவசாயிகள் தாம் பெற்றுக் கொண்ட விவசாயக் கடனை திருப்பி செலுத்த முடியாத நிலையிலும் கூட மீண்டும் மீண்டும் விவசாயக் கடன் வழங்கப்பட்டது. காணி இல்லாதவர்கள் அத்துமீறி விவசாயம் செய்த போதும் அரசு அவர்களுடன் கண்டிப்பாக நடந்து கொள்ளாமல் காலப் போக்கில் அக்காணிகளுக்கான உரிமைகள் அவ் அத்து மீறிய விவசாயிகளுக்கே வழங்கும் முறை கடைப்பிடிக்கப்பட்டதோடு, வருடாந்த உத்தரவுப் பத்திரங்கள் மூலமாக விவசாயம் செய்வதற்கான உரிமையும் வழங்கப்பட்டது. 1977வரை உணவு மானியம் வழங்கப்படுவதும் வெளி நாடுகளிலிருந்து விவசாய உற்பத்திகள் இறக்குமதி செய்தல் மட்டுப்படுத்தப்பட்டு தேசிய விவசாய உற்பத்திகளுக்கு அதிக விலை வழங்கலும் நடைமுறைப் படுத்தப்பட்டது.

1977 க்குப் பின்னர் நாட்டின் பொருளாதார அபிவிருத்தி தொடர்பாக அதுவரை காலமும் நிலவிய அடிப்படைச் செயல் முறைகள் மாற்றியமைக்கப்பட்டு ஏற்றுமதியை மையமாகக் கொண்டு உற்பத்தி செய்யும் வெளிநாட்டு உள்நாட்டு கம்பெனிகளை வரவழைத்தல், அவர்களுக்குத் தேவையான வசதிகளை வழங்குவதற்காக துரித மகவலி அபிவிருத்தி, நகர் அபிவிருத்தி, பெருந் தெருக்கள் அபிவிருத்தி போன்ற பெரும் முதலீடுகளுக்காக இராட்சத அளவிலான வெளிநாட்டுக் கடன்கள் பெறப்பட்டன. இக்கடன்களுக்கான நிபந்தனைகளாக சுதந்திர சந்தைகளை ஏற்படுத்தவும் ரூபாய் மதிப்பிறக்கம் செய்யவும் நேர்ந்தது. இவ் வேலைகளுக்காக செலவு செய்யப்பட்ட பெரும் செல்வம் வெளிநாட்டிலிருந்து பெறப்பட்ட கடனாதலால் இக் கடன்களுக்கு வட்டி செலுத்துவதற்காக விவசாயிகளுக்கும் ஏனைய பொதுமக்களுக்கும் அதுவரை காலமும் வழங்கப்பட்ட உதவி மற்றும் நலன் புரி சேவைகளைத் துண்டிக்க நேரிட்டது. இது பொது மக்களுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது. சுதந்திரமான சந்தையின் வளர்ச்சிக்காக நுகர்வுப் பண்டங்களுக்காக விதிக்கப்பட்டிருந்த விலைக் கட்டுப்பாடு முற்றாக நீக்கப்பட்டது. இவை அனைத்தினதும் மொத்தப் பெறுபேறு, ஒரே தடவையில் (சமாந்திரமாக) சகல நலன் புரிகளும் துண்டிக்கப்பட்டதும், பொருட்களின் விலை வானளாவ உயர்ந்ததும், விவசாயத்திற்குத் தேவையான பசளை, கிருமி நாசினி, உழவு இயந்திரக் கூலி ஆகியவை என்றுமே இடம் பெறா வீதத்தில் விலை உயர்ந்ததும், பயிர்ச் செய்கைக்கான கடன் வழங்கல் வன்மையாக கட்டுப்படுத்தப்பட்டதும், அத்து மீறிய விவசாயிகளுக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டதுமே ஆகும். சுதந்திரமான சந்தை மூலமாக இடை வியாபாரிகள் தாம் விரும்பியவாறு விவசாயிகளைச் சுரண்

www.padippakam.com



டினர். வெளி நாடுகளிலிருந்து தொகையாக இறக்குமதி செய்யப்பட்ட கிழங்கு, வெங்காயம், பருப்பு, மிளகாய் போன்ற உப உணவுப் பொருட்கள் காரணமாக உள்நாட்டு விவசாய உற்பத்திப் பொருட்களின் விலையில் வீழ்ச்சி ஏற்பட்டது. 'ஆனால் இன்றைய விலைவாசி ஏற்றத்தால் விவசாயிகள் உட்பட ஏனைய நுகர்வோருக்குக்கூட இதனால் எதுவித நன்மையும் ஏற்படவில்லை) அத்துடன் கல்வி, சுகாதாரம் போக்குவரத்து, உணவு ஆகியவற்றுக்கான மானியம் கூட நீக்கப்பட்டது. இவை அனைத்தினதும் விளைவாக விவசாயிகள் மிக வேகமாக வறியவர்களாகவும் கடனாளிகளாகவும் இழுத்துத் தள்ளப்பட்டனர். தமது சிறிய துண்டுக் காணிகளை குத்தகைக்கு விட்டு — ஈடாகக் கொடுத்து ஈற்றில் விற்க வேண்டிய நிலை இவ் விவசாயிகளுக்கு ஏற்பட்டது. இன்று அவர்கள் நிலத்தை இழந்த கிராமிய மக்களாக உள்ளனர்.

பொருளாதாரக் கொள்கைகளில் ஏற்பட்ட மேற் குறிப்பிடப்பட்ட மாற்றத்தின் மூலமாக உள்நாட்டு வெளிநாட்டுக் கம்பெனிகள் விவசாயத் துறைக்காகவும், கைத்தொழில் துறைக்காகவும் வேகமாக வந்து குவிவர் எனவும் தமது நிலத்தை இழந்து கூலிக்காரர்களாக மாறிய கிராமிய (விவசாய) மக்களை அக் கம்பெனிக்காரர்கள் தமக்குக் கீழ் வேலைக்கு அமர்த்துவர் எனவும் அரசாங்கம் எதிர்பார்த்தது. மகாவலி பிரதேசத்துக்கு கம்பெனிகளை வரவழைக்கவும், விவசாய அபிவிருத்தி வலயமாக பிரகடனப் படுத்தப்பட்ட மொனராகலை, வவுனியா, மன்னார் மாவட்டங்களுக்கு விசேட வரிச் சலுகைகளின் கீழ் வெளி நாட்டுக் கம்பெனிகளை வரவழைக்கவும் பெரும் முயற்சி எடுக்கப்பட்டது.

ஆனால் அவ்வாறு நிகழவில்லை. இதன் விளைவாக துரித கதியில் வறியவர்களாக மாற்றப்பட்ட கிராமிய விவசாய மக்கள் மேலும் நடைபிணங்களாக்கப்பட்டனர். தமது குழந்தைகளை யாவது இவ் இழி நிலையிலிருந்து விடுவிப்பதற்காக அவர்களுக்குக் கல்வி வழங்கவும் அதன் மூலம் வேறு தொழில்களை பெற்றுக் கொடுக்கவும் எதிர் பார்த்த கிராமப்புற வறிய மக்கள் கல்வி, தொழில் துறைகளிலும் புறக்கணிக்கப்பட்டனர். நவீன முதலாளித்துவ அபிவிருத்திக்கான கல்வியும் கூட மேல் வர்க்கத்தவர்களுக் கென்றே வரையறுக்கப்பட்ட வரப்பிரசாதமாக மாறியுள்ளது.

வெளிநாட்டு முதலீட்டாளர்களை வரவழைக்க - இப்பொருளாதாரக் கொள்கைகளைத் தொடர்ந்தும் கடைப்பிடிப்பதற்கு நாட்டில் பதட்ட மற்ற நிலையை ஏற்படுத்துவதும் நிலையான ஆட்சியை நீண்ட காலம் நிலவச்செய்வதும் அவசியமாதலால் தேர்தலை ஒத்தி வைத்தல், மக்கள் இயக்கங்களையும் தொழிற் சங்கங்களையும் அடக்குதல், நிறைவேற்று அதிகாரங்களைக் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையை ஏற்படுத்துதல் ஆகியன மூலம் அனேக ஜனநாயக உரிமைகள் பறித்தெடுக்கப்பட்டன. இவற்றின் பெறு பேறாக உக்கிரமடைந்த கிராமிய வறுமையுடன் வன்மையான அடக்கு முறையும் இணைந்து கொண்டது. இதனால் ஏற்பட்டிருந்த விரக்தி மேலும் வளர்ச்சி பெற்றது. மேலே குறிப்பிட்ட கொள்கைகளில் இதுவரை எதுவித மாற்றமும் ஏற்படாதமையும், வெளிநாட்டுக் கடன் பளு மென்மேலும் அதிகரிப்பதனாலும் இக் கொள்கையில் மாற்றத்தை ஏற்படுத்த முடியும் என எதிர்பார்க்க இயலாதுள்ளது.

நாடு முழுவதும் எரிமலையாகி வெடிக்க அண்மித்துள்ள நெருக்கடிகள் நிலவும் இவ்வேளையில் தற்காலிகமாக ஆவது மக்களுக்கு சில நிவாரணங்களை வழங்கி நெருக்கடியை ஓரளவிற்காயினும் சமாளிக்க வேண்டிய பாரிய உடனடி அவசியம் நிலவும் இக்கால கட்டத்தில் சீனி, பாண், பாலுணவு போன்ற அத்தியாவசியப் பண்டங்களின் விலையில் பெருமளவு உயர்வை ஏற்படுத்தியும் பசளை மானியத்தை உடனடியாகத் துண்டித்ததன் மூலம் விவசாயிகளுக்கு சொல்லொண்ணாத் துன்பத்தை ஏற்படுத்தவும் அரசுக்கு நேர்ந்துள்ளது. ஆட்சியிலுள்ள சிலருக்கு தற்கொலைக்குச் சமமான இந்நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. விருப்பத்துடன் அல்ல என்பது தெளிவானதாகும்.

உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் போன்ற வெளிநாட்டுக் கடன்களை நிருவகிக்கும் அமைப்புக்களால் தயாரிக்கப்பட்டு வழி நடத்தப் படுகின்ற இவ் வேலை முறைகளை மாற்றி அமைக்கவோ, தடுத்து நிறுத்தவோ அல்லது ஆகக் குறைந்தது பிற்போடுவதோ அரசாங்கத்துக்கு இயலாத காரியம் என்பதே இதிலிருந்து புலனாகிறது.

எமது மக்களின் வாழ்க்கைக்கு அவசியமான உணவுத் தேவைகளுக்காக அல்ல வணிகதேவை

www.padippakam.com



களுக்காவே விவசாயம் என இன்று அழுத்திக் கூறப்படுகிறது. ஆரம்பத்தில் ஏற்றுமதி செய்யக்கூடிய விவசாயப் பொருட்களை உற்பத்தி செய்வதற்காக பெரும் கம்பெனிகளை வரவழைக்க முயற்சிக்கப்பட்டது. இன்று 'ஏற்றுமதிக் கிராமங்கள்'' பற்றி பேசப் படுவதும் 'புகையிலைக்கம்பெனி' போன்ற கம்பனிகளுக்கு தேவையான விவசாய உற்பத்திகளுக்காக கிராமங்களில் உள்ள சிறு விவசாயிகள் ஊக்குவிக்கப்படுவதும் இக்கருத்துடனேயே ஆகும்.

மேலே கூறப்பட்ட உலக கடன் நிறுவனங்களின் கருத்துகளுக்கமைய தயாரிக்கப்படும் விவசாய வேலைத் திட்டங்களால் நிகழப் போவது என்ன? எமது நாட்டின் கிராமிய விவசாயம் மிகப் பாரிய சர்வேதேச கம்பனிகளின் அவசியங்களைப் பூர்த்தி செய்கின்ற வணிகப் பயிர்ச் செய்கையை நோக்கித் தள்ளப்படுதலேயாகும். நெல் உட்பட ஏனைய பயிர்ச் செய்கைகள் அனைத்தும் பசளை, கிருமி நாசினி, பூண்டு நாசினி, ட்ரக்டர் (உழவு இயந்திரம்) ஆகியவற்றின் பாவனைக் காகப் பழக்கப்பட்டுள்ளன. இதனால் எமது விவசாயிகளின் உழைப்பின் பெரும்பகுதி, இப் பாவனைப் பொருட்களை உற்பத்தி செய்யும் பாரிய கம்பனிகளுக்கு இலாபத்தையே ஈட்டிக் கொடுக்கிறது.

காணிப் பங்கீட்டுத் திட்டம், 'ஜனசவிய' மூலம் இவ் விவசாய குடும்பங்களுக்கு சிறிய அளவிலான பணம் வழங்கல் ஆகியன (இன்றைய விவசாய அமைப்பு முறையில் மாற்றத்தை ஏற்படுத்தாவிடின்) விவசாயிகளை மென் மேலும் வறியவர்களாக மாற்றுவதோடு கம்பனிகளின் இலாபத்தைப் பெருக்கவும், எவ்வித பிரதி இலாபமும் பெறாத விவசாயிகள் இன்னுமொரு தொகையினரை உருவாக்கவுமேவழி சமைக்கும். வணிகப் பயிர்ச் செய்கைக்காக பழக்கப்படுகின்ற விவசாயிகள் இறுதியில் எமது நாட்டு மக்களின் தேவைகளுக்கான உணவு உற்பத்தியில் ஈடுபடாமல், கம்பெனிகளின் இலாபத்தை அதிகரிப்பதற்காக உழைக்கும் அடிமைகளாக மாறுவர்.

இக் கேடுகெட்ட நிலையிலிருந்து எமது விவசாயிகளையும் எமது நாட்டையும் விடுவித்து கிராமிய சமுதாயத்திலும் நாட்டிலும் நிலவும் நெருக்கடியைத் தீர்க்க வேண்டுமாயின் உள்நாட்டு உணவுத் தேவைகளுக்கு முன்உரிமை வழங்குவதும், பாரிய விவசாய வணிக கம்பனிகளின் பிடியிலிருந்து விடுபடுவதற்கு உதவக் கூடிய விவசாய ஆராய்ச்சி முறையும், எமது விவசாயிகளுக்குத் தேவையான பசளை போன்ற விவசாயப் பாவனைப் பொருட்களை நாமே உற்பத்தி செய்யும் முறையும், அதற்கான சக்தியை விவசாயிகள் பெற்றுக் கொள்ளக் கூடியவாறு காணிப் பாவனைத் திட்டமும் கம நலச் சேவையும் அவசியமாகும். சுமார் 18 இலட்சம் சிறிய வறிய விவசாயிகளின் உழைப்பினால் பெறப்படும் உற்பத்தியையும் அவ் உழைப்பின் உபரியையும் எமது நாட்டுக்குள்ளேயே—விவசாய சமுதாயத்துக்குள்ளேயே தங்கக் கூடிய முறையில் அமையப்பெற்ற விவசாயக் கொள்கைகளும் அவசியமாகும். உலகம் தழுவிய பெரும் முதலாளித்துவம் இன்று விவசாயத்தின் மீது செலுத்தும் ஆதிக்கத்தின் தன்மைகளை சரியான முறையில் விளங்கிக் கொண்டு அவற்றுக்கு முகம் கொடுத்து அதிலிருந்து விடுதலை பெறும் செயல் திட்டமும் அவசியமாகும். அது புரையோடிய புண்ணுக்கு புனுகு தடவும் நடவடிக்கையாக இருக்க முடியாது. பொருளாதார அபிவிருத்தி குறித்து கைக் கொள்ளப்படும் இன்றைய கோட்பாட்டிலிருந்தும் செயல் முறைகளிலிருந்தும் முற்றிலும் வேறுபட்ட கோட்பாடாகவும் செயல் முறையாகவும் அமைய வேண்டும்

*நன்றி : 'விவரண' — 1990 மார்ச்*

www.padippakam.com



# நாட்குறிப்பு

சரண்யா

சனிக்கிழமை குறைந்தது ஒன்பது மணி வரையுமாவது படுக்க வேண்டுமென்று முயன்றாலும் ஐந்தரை ஆறு மணிக்கு மேல் முடிவதில்லை. பிரச்சனைகள் எழுப்பி விட்டு விடுகிறதேயன்றி நானாக நினைத்தொன்றும் செய்வதில்லை. எறும்பு மொய்த்தது போல ஒன்றன் பின் ஒன்றாக ஆரம்பித்துப் பின்பு மொத்தமாக ஒன்று திரண்டு மூளையைக் கடித்துக் குதறிக் கொண்டிருக்கும். இந்த மூன்று வருடக் கனடா வாழ்க்கையில் பிரச்சனை எறும்புகளின் அன்றாட மேய்ச்சல். நாற்பத்தியெட்டு வயதில் இப்படியொரு வாழ்க்கை.

இந்த ''பிரிட்ஜ்'' வேறு சனியன். எந்த நேரமும் ''கிர் கிர்'' ரென்று சத்தம் போட்டபடி. எரிச்சலாக வருகிறது. இந்தக் காலையின் அழகையும், அமைதியையும் குலைத்துக் கொண்டிருக்கிறது. எழுந்து போய் சுவருடன் சேர்ந்து ஒரு தள்ளுத் தள்ளிப் பார்க்கிறேன். அப்போது முற்றாக நிற்காவிட்டாலும் கொஞ்சம் குறைந்திருக்கிறது. இதற்கு மேலும் ஏதாவது செய்தால் பின்புறமுள்ள ''கொம்பிரெசர்'' உடைந்து ''பிரிட்ஜ்'' இற்குள் இரண்டு கிழமையாக இருக்கும் கறி வகைகள் பழுதாகிவிடும். இந்தச் சனி, ஞாயிறில் அவற்றை ஒரு குழையப் போட்டுச் சாப்பிட்டு முடிப்பதோடு இன்னும் இரண்டு கிழமைக்குப் புதிதாக ஏதாவது சமைத்து வைக்க வேண்டுமென்கிற என்னுடைய திட சங்கற்பங்களெல்லாம் கூடவே உடைந்து நொருங்கிவிடும். என் ''அட்சய பாத்திரத்தை'' இனிமேலும் அலுப்புக் கொடுக்கக் கூடாதென்று விட்டு விடுகிறேன். இதில் இன்னுமொரு சிக்கலும் இருக்கிறது. இந்தப் பெரிய ''பிரிட்ஜ்'' ஜை அரக்கிக் கிரக்கி ஏதாவது செய்யப்போக நாரிக்குள் பிடித்துவிட்டால் அவ்வளவுதான். திங்கட்கிழமை குமாருக்கு அவல் கிடைத்த மாதிரி! சும்மாவே காரணமில்லாமல் ''வள் வள்'' ளென்று ஏவி விழுபவன்—நான் வேலைக்குப் போய் திங்கட்கிழமையும் அதுவுமாகக் குனியவோ, நிமிரவோ ஏலாமல் சிரமப்பட்டால் உலுக்கி யெடுத்து விடுவான்.

கடந்த ஆறு மாத காலமாக இந்தக் குமாரோடும் இவன் சகாக்களோடும் — எல்லோருக்கும் என்னில் பாதி வயதுதான்! —பட்டு வரும் அவஸ்தைகளும், மன உளைச்சல்களும் கொஞ்ச நஞ்சமல்ல. சுமார் நான்கு வருடங்களுக்கு முன்பு இந்தக் குமார் கனடாவுக்கு விமான மூலம் வந்தான். கூட வந்த எல்லோரும் ''பிளேனை'' விட்டு இறங்கி விட்டார்கள். இவன் மட்டும் மிதந்தபடி நேரே இந்த ''பாக்டறிக்குள்'' வந்து வேலைக்குச் சேர்ந்து — ஏற்கெனவே புளிப்பேறின தலைக்கு ''போர்மென்'' என்கிற தொப்பியை வேறு போட்டுவிட பிள்ளைக்குத் தலைகால் தெரியாமல் போனதில் தான் இந்த ''வள் வள்''. இன்னும் சில நூற்றாண்டுகளுக்கு மிதந்து கொண்டேயிருப்பான் என்பது எனது கணிப்பு.

இதென்ன? ஐந்து நாட்களும் இவனுடன் அலுப்புப்பட்டுவிட்டு இந்தச் சனிக்கிழமை விடுமுறை நாளிலும் இவனையே நினைத்துக் கொண்டு? ஒருவாறு காலைக் கடன்களை முடித்துக் கொண்டு வெளியே போக ஆயத்தமாகிறேன். ஜன்னலைத் திறந்து பார்த்ததில் வெளியே குளிரில்லை. சும்மா ''ஷேர்ட்'' டோடு போகலாம் போல் தெரிகிறது. ''பாங்க்'' கிற்குப் போய் பின்பு ''ஜான் தசோன் மார்க்கற்'' இல் காய் கறி, அதன் பின்பு ''செயின்ற். வோரன்ட்'' இல் இறைச்சி. திட்டம் போட்டாயிற்று. எனக்கு இரண்டு வாரங்களுக்கொரு முறை சம்பளம் தருவதால் ஒவ்வொரு இரண்டு வாரங்களிலும் இந்த அவஸ்தை.

''ஜான் தசோனில்'' இறங்கிய போது ரமேஷ் எதிர்பக்கமாய் நடந்து வந்துகொண்டிருந்தான். இன்றைக்கு ''ஓவர் டைம்'' செய்ய வேண்டுமென்று நேற்றுச் சொல்லிக் கொண்டிருந்தான்.

www.padippakam.com



இப்போது இங்கே நிற்கிறான்? ஒரு வேளை போகவில்லை போல. ஒரு காதில் கடுக்கனும், பிடரியில் சிறிய குடுமியுமாய் — ''ஹாய்'' நான் பேசாமல் கையைக் காட்டிவிட்டுப் போய்க் கொண்டிருக்கிறேன். இந்த ''ஹாய்'' உட்பட இன்னுமொரு நாலைந்து வார்த்தைகளுடன் இவன் ஆங்கில அறிவு முற்றுப் பெற்று விடுகிறது.

எனக்கு மாத்திரம் இந்த ஆங்கில அறிவும் இல்லாது போயிருக்குமானால் என்னை நாய் கொண்டு போயிருக்கும். இவன்கள் என்னை வைத்து ''பேஸ்பால்'' ஆடியிருப்பான்கள்.

ஒரு வழியாக ''செயின்ற் வோரன்ட்'' வந்து சேர பன்னிரண்டு மணியாகி விட்டது. இறைச்சிக் கடையில் ஏகப்பட்ட சனம். வழமைபோல அநேகமான தமிழ் முகங்கள். பாலன் கையில் இரண்டு ''வீடியோ கசற்'' றுகளுடன் நின்று கொண்டிருந்தான். அது என்ன வீடியோ'' என்பதும், அவன் ஏன் ''செயின்ற் வோரன்ட்'' டில் அலைகிறான் என்பதுவும், ''பாக்ரறி'' முழுவதும் பிரசித்தமான விஷயம். பகல் சாப்பாட்டு இடைவேளையின் போது பக்கத்து மேசையிலிருந்து கொண்டு எனக்குக் கேட்காதென்று நினைத்துக் கொண்டு குமாரும், இவனுகளும் கூடிக் கூடி நேற்றிரவு பார்த்த ''புளுபிலிம்'' பற்றிச் சிலாகித்துப் பேசுவதைத் தான் தினமும் கேட்கிறேனே. எனக்கு எதுவும் கேட்கவில்லையென்பதாகக் காட்டிக் கொள்வதற்கு நான் படும் பிரயத்தனங்கள் கொடுமை. எனக்கும் கேட்கிறதாக இவன்களுக்குத் தெரிந்தாலோ இருக்கிற கொஞ்ச நஞ்ச மரியாதையும் போய்விடும். பிறகு எனது ''செக்ஸ்'' அனுபவங்களைப்பற்றி பேட்டி காணவும், ''மாடர்ன் டெக்னாலஜி'' பற்றிப் போதிக்கவும் ஆரம்பித்து விடுவான்கள்.

''என்ன மாஸ்ரர், இறைச்சி வாங்க வந்தனியள் போல'' வழிந்து கொண்டு கேட்கிறான் பாலன். 'பின்ன என்ன இருபத்தி ஐந்து சதத்தை போட்டு ஒட்டைக்குள்ளால் விடுப்புப் பார்ப்பதற்கே வந்தனான்?' என்று எரிந்து கொண்டே மனதிற்குள் சொல்லிக் கொண்டாலும் வெளியில்,

''ஓமோம்'' என்பதோடு வெட்டிக் கொண்டு, வெட்டி முடித்த இறைச்சியையும் பெற்றுக் கொண்டு வழமை போலவே ஒரு சிறிய ''பலன் ரைன்ஸ்'' விஸ்கிப் போத்தலையும் வாங்கிக் கொண்டு வீடு வந்து சேர மூன்றரை மணியாகி விட்டது.

## 2

ஞாயிற்றுக் கிழமை. ஒன்பது மணிவரையும் நிம்மதியாகத் தூங்கி யெழும்ப முடிந்தது, ''பலன் ரைன்ஸ்'' உடைய புண்ணியத்தில். பிரச்சினைகள் எதுவும் பெரிதாகப் பாதிக்காது. மூளை கொஞ்சம் சுகமாக இருக்கிறது. முகம் கழுவலாமென்று போனால் குளியலறையைக் கொஞ்சம் சுத்தம் பண்ணவேணும். துவைப்பதற்காக ஊறப் போட்ட உடுப்புகள் இரண்டு நாட்களுக்கு மேலாக இழுபடுகிறது. துவைத்துவிட்டால் நாளைக்கு வேலைக்குப் போட்டுக் கொண்டு போகலாம். இல்லையேல் நல்ல உடுப்புகளை அணிந்து கொண்டு போய் வேலை செய்யும் போது எதிலாவது மாட்டிக் கிழிந்து போய் விடுமோவென்று பயந்து, நெளிந்து கொண்டிருக்கும் போதில் முதுகிற்குள் கொளுவிப் பிடித்து விடும். பிறகு பெட்டி தூக்கும் போது வலிக்கும். மெதுவாக வேலை செய்தால் குமார் குளறுவான். முன்பும் ஒருக்கால் இப்படி நடந்து குமார், ரமேஷிடம் சொல்லிக் கொண்டிருந்ததை என் காதுபடக் கேட்ட போது வாழ்க்கையே வெறுத்துவிட்டது.

''மச்சான் இந்தக் கிழடுகள் எல்லாம் ஊரில் ''பென்ஷன்'' காசோட கோயில் குளமென்று இருக்காமல் காசுக்கு அவாப்பட்டு இஞ்சை வந்து பெரிய உபத்திரவம்''

அப்போதுதான் எனக்குள் எனது நாற்பத்தியெட்டு சாதுவாக உறைந்தது. பாதியாய் நான் செத்ததும் அப்போதுதான். என்னுடைய பதினெட்டு வருட ஆசிரியத் தொழிலில் ஒரு மாணவனையாவது கை தொட்டோ பிரம்பாலோ அடித்திருக்க மாட்டன். இவன் சொற்களால் என்னை உடைத்துவிட்டான். அந்த நாட்களில் ''சோக்கட்டி'' யைத் தவிர வேறெதையும் தூக்கியறிய மாட்டன் என்றெல்லாம் மனதிற்குள் புழுங்கி புலம்பிக் கொண்டிருந்தேன்.

''இதேன் இந்த வில்லங்கம்? என்று முணுமுணுத்துக் கொண்டே தோய்த்து முடித்து, ஒரு

படிப்பகம்

www.padippakam.com



அம்சமான குளியலும் முடித்து விட்டு வெளியே வந்ததில் உடலுக்கும், மனதிற்கும் ஒரு சாந்தி கிடைத்தது போன்ற உணர்வு. நாளைக்கு வேலைக்குப் போய் முறிவதற்கான தெம்பு வந்து விட்டது. இதோடு இன்னும் ஐந்து நாட்களை ஓட்டிவிடலாம். ஞாயிற்றுக் கிழமை ரொம்பவும் அமைதியாக மன உளைச்சல்கள் எதுவுமின்றிக் கழிந்து போகிறது.

## 3

திங்கட் கிழமை. காலை நேரத்துப் பரபரப்புகள் எதுவும் எனக்குக் கிடையாது. வழமையே போல் ஆறுமணிக்கு எழுந்திருக்கிறேன். ஜன்ன லைத் திறந்து பார்த்தால் வெளியே மழைக் குணமாகத் தெரிகிறது. கனடாவின் கால நிலை தமிழ் நாட்டு அரசியல் வாதியைப் போல. அரைமணி நேர ''பிரேக்' கிற்குள் சாப்பிடக் கூடிய மாதிரி நாலு துண்டுப் பாணுக்கு நடுவே எதையோ அடைத்து கொண்டு தோளில் கொளு விக் கொண்டு போகும் பையில் வைக்கிறேன்.

''இந்த வயதிலேயும் 'ஸ்கூல்' பெடியன் மாதிரி மாஸ்ரருக்கு ஒரு ஸ்ரைலான பாக்'' என்று முன்பு ஒரு நாள் இந்தப் பை வாங்கிய புதிதில் பாலன் நக்கலடித்தது இன்னமும் காதில் கேட்டுக் கொண்டிருக்கிறது. நெஞ்சுக்குள் 'சுருக்' கென்று தைத்தாலும் வெளியே நானும் சேர்ந்து சிரித்து மழுப்பி விட்டேன். இந்த ஊர்க் கிழடுகள் அரைக்காற் சட்டையும், சன் கிளா சும் போட்டுக் கொண்டு போனால் இவனு களுக்கு அது ஒரு பிரச்சினையில்லை.

சரியாக எட்டுக்குப் பத்து நிமிடம் இருக்க 'பாக் ரறிக்குள்' நுழைந்து 'காட் பஞ்ச்' பண்ணிக் கொள்ளும் போது

''குட் மார்ணிங் மாஸ்ரர்'' வெல வெலத்துப் போய், என் காதுகளையே நம்ப முடியாதவ னாய்த் திரும்பிப் பார்த்தால் குமார்.

இப்போது என் கண்களையும் ஏன் என்னையும் நம்ப முடியவில்லை. இதென்ன ''ஓவர்நைற் ரெவல்யூஷன்''. இந்த ஆறுமாத வரலாற்றி லேயே இல்லாத ஒரு வரவேற்பு. நானொரு கொர்பச்சேவாகவும் அவன் ஒரு ஜோர்ஜ் புஷ் ஆகவும் எனக்குப் பட்டது. புல்லரித்துப் போனேன். இதை விடவும் பல அதிசயங்கள் இன்றைக்கு நடக்கவிருப்பதை அனுமானிக்கும் திராணியற்றுப் போனேன்.

பத்து மணி 'பிரேக்' கிற்கு 'பெப்சி' வாங்கித் தந்தான். பாலன், ரமேஷ், அங்கிருந்த இயந் திரங்கள், நான் தூக்கி அடுக்கும் பெட்டிகள் எல்லோருக்கும் பரம ஆச்சரியம். பிறகு இன்று முழுவதும் என்னைப் பெட்டி தூக்கவே விட வில்லை. எல்லாவற்றையும் தானே செய்தான். என்னை அவைகளை எண்ணிக் கணக்குப் பார்த்து 'பில்' தயாரிப்பதை மட்டும் செய்யச் சொல்லி அன்போடு பணித்துவிட்டும் போனான். இதென்ன? இந்தத் தமிழ்ப்படங்களில் வில்லன் செய்யாத அநியாயமெல்லாம் செய்துவிட்டு கடைசி 'ரீல்' முடியக் கிட்டவாக திடீரென்று திருந்தி நல்லவனாகி விடுவதோடு உதிரியாக ஒரு 'டயலாக்'கும் பேசுவானே அது போலக் குமார் நடந்து கொண்டான். இன்று முழுவதும் நான் மிதந்து கொண்டிருந்தேன். கால்கள் தரையில் பாவவில்லை.

மாலை நான்கு மணி. வேலை முடிய இன்னும் அரை மணி நேரம் இருக்கிறது. உடல் கொஞ் சம் களைத்திருந்தாலும் மனம் என்னவோ உற் சாகமாகவே இருக்கிறது. குமார் குழைந்த குழையலைப் பார்த்து விட்டு பாலனும், ரமே ஷும் என்னுடன் பேரன்பு பூண்டனர்.

ஏதோ நல்லது நடக்கட்டும் என்று நான் எண் ணிக் கொண்டிருந்த போது குமார் வந்து—

''மாஸ்ரர், ஒரு நிமிஷம்''

என்று சொல்லிக் கூட்டிக் கொண்டு சாப்பாட்டு அறைக்குப் போனான். மற்ற நாட்களில் வேலை நேரத்தில் அவசரமாக ஒன்றுக்குப் போனாலே ''ம்...சயரோகக்காரரையெல்லாம் வேலைக்கு வைத்துக் கொண்டு நான் படுகிற பாடு?'' என்று புறுபுறுப்பவன், இன்று......சரி, சரி விடு. எல்லா நேரமும் ஒரு மனுஷன் ஒரே மாதிரியா இருப்பான்? என்று என்னை நானே திட்டிக் கொண்டும், இவன் ஏதோ ஒரு முக்கிய மான விடயம் என்னுடன் பேசப்போகிறான் என்பதை அனுமானித்துக் கொண்டும் அவன் கூடப் போகிறேன்.

''மாஸ்டர் நீங்கள் எனக்கு ஒரு பெரிய உதவி செய்ய வேணும். செய்வியளோ?

www.padippakam.com



''என்ன என்டு சொல்லும் தம்பி. என்னால ஏலுமெண்டால் கட்டாயம்''

—சிறிது நேரத் தயக்கத்தின் பின்பு ''மாஸ்ரர், எனக்கு 'இமிக்ரேஷன்' இல இருந்து 'இன்கு வயரி' க்கு வரச் சொல்லி 'அப்பொயின்மன்ற் லெற்றர்' வந்திருக்கு. அதில் ஊருப்பட்ட 'போம்' நிரப்ப வேணும். அதோட என்ரை 'கேசும்' எழுதித் தந்து நீங்கள்தான் உதவி செய்ய வேணும். மாஸ்ரரைக் கஷ்டப்படுத் திறனோ தெரியேல்ல. நீங்கள் படிச்ச நீங்கள். கட்டாயம் வடிவாய் நிரப்பித் தருவியளெண்ட தம்பிக்கையில்தான் மாஸ்ரர் உங்களிட்டைக் கேட்கிறன்.''

—கொஞ்ச நேரம் எனக்கு என்ன செய்வது, சொல்வது என்றே தெரியவில்லை. இது நாள் வரை இவன் என்னுடன் நடந்து கொண்ட எல்லாவற்றுக்கும், இப்போது இவன் பேசியது என் 'ஈகோ' வைத் திருப்திப்படுத்தியதாகவே எனக்குப் பட்டது. பிறகு இப்படி நான் நினைப் பது அற்பத்தனமானதென்று எனக்கு உறைக்க ஆரம்பித்தது. சின்னப் பெடியன். இவனுடைய எதிர்காலமே இதில்தான் அடங்கியிருக்கிறது. நான் மிகவும் பொறுப்பாக இதைச் செய்து கொடுக்க வேண்டும்.

''என்ன மாஸ்ரர் யோசிக்கிறியன்?

''இல்லை தம்பி, இன்றைக்குத் திங்கட் கிழமை. நல்லநாள். வேலை முடிய அப்பிடியே என்னுடைய வீட்ட போவம். தம்பிக்கேதும் வேற அலுவல் இருக்கே?''

''இல்ல மாஸ்ரர். இதைவிட வேற என்ன வேலை? அப்பிடியே காரிலை போவம்.''

—மனது மிகவும் இலேசாகியிருந்தது.

●●●


# விமலன் புக்ஸ்

(புத்தக வெளியீட்டாளர்கள்)

புதிய வெளியீடுகள்

●

சின்னு முதல் சின்னு வரை
வண்ணதாசனின் நெடுங்கதை ... ரூ 12/—

தெற்கிலிருந்து சில கவிதைகள்
பன்னிரண்டு கவிஞர்களின்
அறுபத்தெட்டு கவிதைகள் ... ரூ 15/—

பயணியின் சங்கீதங்கள்
சுகுமாரன் கவிதைகள் ... ரூ 8/—

●

26/1, பாபநாசம் சிவன் சாலை
சாந்தோம், சென்னை-600 004

75, பெண்ணாகரம் சாலை
தருமபுரி-636 702

www.padippakam.com



# கடவுளின் கடந்த காலம்

### கோபிகிருஷ்ணன்

திடீரென்று பழுக்கக் காய்ச்சிய இரும்புத் துண்டு ஒன்று அவரது இடது தொடை மேல் இருந்தது. அவர் துடித்தார். சற்றுக் கழித்து இரும்புத் துண்டு விலகிற்று. அலறியடித்துக் கொண்டு லுங்கியை விலக்கித் தொடையைக் கவனித்தார். சதை வெந்து ரணமாகியிருந்தது. மருத்துவரிடம் சென்று, களிம்பு ஒன்று தடவியதில் சில தினங்களில் குணமாயிற்று. ஆனால் தீ வடு நிலைத்தது. இரண்டு நாட்கள் கழித்து வலது தொடை மீது எரிந்து கொண்டிருக்கும் பீடி ஒன்று வைக்கப்பட்டிருந்தது. சிறிது நேரம் சென்று பீடி அகன்றது. தீக்காயம் ஏற்பட்டிருந்தது.

இப்பொழுது இந்த அனுபவம் அவருக்குப் பழக்கப்பட்டுவிட்டிருந்தது. திடீரென அவரது கைக் கடிகார வார் முறுக்கப்பட்டது. மணிக்கட்டில் தாங்க முடியாத இறுக்கம் ஏற்பட்டது. அவர் எச்சரிக்கையானார். இப்படியே விட்டால் இது அவரைத் தூக்கிச் சாப்பிட்டுவிடும். அவர் சில முடிவுகளை உடனடியாக எடுக்கத் தொடங்கினார். புதிய முயற்சிகளில் ஈடுபடலானார். இன்னும் மணிக்கட்டில் இறுக்கம் தொடர்ந்து கொண்டிருந்தது. அவர் விவேகத்துடன் மானசீகமாகக் கைக் கடிகாரத்தைக் கழற்றினார். உடனே இறுக்கம், உபாதை வடிந்தது. அவர் தான் கையாண்ட உத்திக்காகத் தன்னைப் பாராட்டிக் கொண்டார். அந்த வினோதமான ஒன்றை வென்ற திருப்தி அவருக்கு மனநிறைவைத் தந்தது. அப்பாடா! இந்தக் கஷ்டத்திலிருந்து ஒருவாறு விடுபட்டாகி விட்டது.

ஆனால் அவரது நிம்மதி நெடுமூச்சு அதிக காலம் நிலைக்கவில்லை. தலை முடிக்குள்ளே ஒரு பல்லி ஊர ஆரம்பித்தது. இப்பொழுது அவர் அலறவில்லை. பல்லியை மானசீகமாகக் கைகொண்டு தட்டிவிட்டார். உடனே ஊரல் அகன்றது. மீண்டும் அவர் தன்னைப் பாராட்டிக் கொண்டார். மென்மேலும் நெருப்புத் துண்டுகள் அவரை இம்சித்தபடி இருந்தன. அவர் மன ரீதியில் அவற்றை அகற்றி நிவாரணம் தேடிக்கொண்டிருந்தார்.

இப்படியே காலம் நகர்ந்து கொண்டிருந்தது. மானுட சோதனைகளில் நேரம் அதிகம் விரயமாகிக் கொண்டிருந்தது. அவர் சளைக்காமல் அந்த விசித்திரத்துடன் மல்லாடிக் கொண்டிருந்தார். ஒரு கற்பித மதம் பிடித்த யானையுடன் உக்கிரத்துடன் போரிட்டு அடிக்கடி வெற்றி காணும் உணர்வு அவருக்கு ஏற்பட்டுக் கொண்டிருந்தது.

ஆழ்ந்து உறங்கிக் கொண்டிருந்தவருக்கு அதிகாலை வேளையில் ஒரு ரம்மியமான அனுபவம் ஏற்பட்டது. வசீகரமான ஆகாயப் பரப்பு. ஒரு பூதாகாரப் பருந்து சுழன்று சுழன்று வந்து கொண்டிருந்தது. பிரபஞ்சமனைத்தும் சுழன்று சுழன்று வந்தது. பருந்து அனைத்துக்கும் மேலாக வட்டமடித்துக் கொண்டிருந்தது. பருந்து அழகே உருப்பெற்றதாக இருந்தது. அதன் கழுத்தை வெள்ளை வட்டம் ஒன்று ஆரமாக அலங்கரித்திருந்தது. வட்டமிட்டுக் கொண்டிருந்த பருந்து அந்தரத்தில் நிலைத்து நின்றது. தன் அலகுகளை அகலத் திறந்தது. அவர் உட் சென்றார் மிகவும் பிரியப்பட்டு. அந்த அழகான உயிரினத்தினுள் அவர் ஒரு கணம் ஐக்கியமானார். நேரம் கழிந்தது. பருந்தின் அலகுகளிலிருந்து அவர் வெளி வந்தார். உதடுகள் அனிச்சையாக முணுமுணுத்தன:

''நான் சக மனிதனை நேசிப்பவன், காதலிப்பவன். இனி இந்தப் பிரபஞ்சத்திலுள்ள சகல உயிரினங்களும் என் உற்ற தோழர்கள்.'' அவரது உறக்கம் கலைந்தது. கண்ணெதிரே ஓர் ஒளி வட்டம் தென்பட்டது. அதிலிருந்து ஒரு செய்தி வெளி வந்தது: ''அன்பு, எல்லாம் அன்பு மயம்.'' ஒளி வட்டம் அகன்றது. ஆனால் செய்தி மனதில் ஆழமாகப் பதிந்தது.

அடுத்த இரவு இன்னொரு அனுபவம். உறக்கம் கலைந்த நிலையில் எழுந்து உட்கார்ந்து

www.padippakam.com



கொண்டிருந்தார். எந்தவொரு சிந்தனையும் அவரை ஆட்கொள்ளவில்லை. முற்றாக ஒரு சிந்தனையும் அற்ற நிலை. அந்த அனுபவம் நிகழ்ந்து கொண்டிருந்த சமயம் அவர் அதை நுகர்ந்து கொண்டிருக்கும் போது அது எப்படிச் செயல்படுகிறது என்பதை உணர்வது அசாத்தியம். அனுபவம் நிறைவுற்ற பிறகே பின்னோக்கி நகர்ந்து அனுபவத்தின் போது அது செயல்பட்ட விதத்தை ஊகிக்கலாம். எது எப்படியோ அந்தச் சிந்தனையற்ற சூனியம் அவருள் நிகழ்ந்து கொண்டிருந்தது. ஒரு பிரம்மாண்டமான சூனியம். முழுக்கவும் ஒன்றுமில்லாத நிலை. அவரும் இல்லை. எதுவும் இல்லை. அவரது அனுபவம் முடிவுற்றது. அவர் இப்பொழுது ஆழ்ந்த அமைதியைப் பிரக்ஞை பூர்வமாக அனுபவித்தார். எண்ணங்களற்ற வெற்று நிலை; மனதின் அசைவுகளற்ற, சலனமற்ற உயரிய நிலை. முக்தி நிலை. அவருக்கு அது ஏற்பட்டிருந்தது, ஒரு பத்தே நிமிடங்களாக இருந்தாலும். புத்தரின் போதி விருட்சமும் ஆர்க்கிமிடீஸின் தண்ணீர்த் தொட்டியும் நினைவில் தைத்து விடுபெற்றன. தனக்கு ஒரு சாதாரணப் படுக்கை. பரவாயில்லை. எந்த நிலையில் உன்னத அனுபவங்கள் ஏற்பட்டாலும் வரவேற்கத் தக்கனவே. மீண்டும் அந்தச் செய்தி அவரைச் சந்தித்தது. ''அன்பு, எல்லாம் அன்பு மயம்''.

அவர் இப்பொழுது அன்பே உருவானவராக விளங்கினார். கனிவு, பரிவு, நேசம் — அது தான் அவர். குரலில் தேன் வழிந்தது. அவருக்கு நிறைய நண்பர்கள் ஏற்பட்டார்கள். தோழிகளும். அவர் முதல் முறையாகக் கடவுள் பற்றி மற்றவர்களிடம் பேச ஆரம்பித்தார். கடவுள் என்றால் அன்பு என்றார். பரந்து பட்ட நேசத்திலும் பிறரை மன்னிப்பதிலும்தான் கடவுள் இருக்கிறார் என்றார். கடவுள், மனிதன் உருவாக்கிய சம்பிரதாயக் கட்டிடங்களில் இல்லை என்றார். சில மதவாதிகள் அவரைக் கடுமையாகச் சாடினார்கள். அவர் மௌனமையுடன் விமரிசனங்களை ஏற்றுக் கொண்டார். விமரிசனம் செய்பவர்களையும் தான் ஆழ்ந்து நேசிப்பதாகச் சொன்னார். ஒரு நாத்திக வாதியின் நேசம் தங்களுக்குத் தேவையில்லை என்றார்கள் அவர்கள். தன்னை அன்னியப்படுத்த வேண்டாம் என்று அவர் கெஞ்சினார். அதீத மானுடக் கற்பனைகளால் உருப்பெற்ற கடவுள்கள் மனிதர்களுக்கு ஒரு பிரச்சினையாக இருக்க வேண்டாம் என்றார். ஆனால் அவர்களுக்கு அன்பைவிட ஒரு சிலைக் கடவுள் தான் முக்கியமாகப் பட்டது. அவர் மன வருத்தம் கொள்ளவில்லை. அவரது அன்பு வடியாத ஒன்றாக இருந்தது. ''சாந்தி'' என்ற வார்த்தையை அவரது உதடுகள் அடிக்கடி உச்சரித்தன.

திடீரென ஒரு நாள் அவரது நினைவுகள் ஓராண்டு காலம் பின்னோக்கி நகர்ந்தன. தான் கஞ்சா அடித்ததையும் அப்பொழுது பிரக்ஞை விசாலமாகத் தோன்றியதையும் நினைவு கூர்ந்தார். ஓர் ஒன்பது மாத காலம் ஒரு நிலையில் தொடர்ந்து உட்காரவோ நிற்கவோ முடியாமல் நிலை கொள்ளாமையால் அவஸ்தைப்பட்டதும் அவரது நினைவுக்கு வந்தது. ஏழெட்டு முறை போதை மாத்திரைகள் உட்கொண்டதையும் நான்கு முறை தற்கொலை முயற்சிகளை மேற் கொண்டதையும் நினைவு படுத்திக் கொண்டார். அப்பொழுதும் அவர் பிரபஞ்சத்தைப் பற்றியும் கடவுளைப் பற்றியும் யோசித்ததுண்டு. ஆனால் அவை மிக மிகக் குழப்பமான நாட்கள். பிறகு தன்மேல் வைக்கப்பட்ட நெருப்புத் துண்டுகள் அவர் நினைவை எரித்தன. கஞ்சாவும் போதை மாத்திரைகளும் அவருக்கு எப்படியெல்லாம் தொல்லை தந்து விட்டன! தான் திடமுடன் போராடாமல் விட்டிருந்தால், அந்த இரண்டு விழிப்புணர்வு அனுபவங்களும் ஏற்பட்டிருக்காவிட்டால்? அவர் மேற்கொண்டு நினைக்க அஞ்சினார்.

மனம் லேசான தொந்தரவுக்குள்ளானதை அவர் உணர்ந்தார். எழுந்து குளியலறைக்குச் சென்றார். முகத்தைக் கழுவிக் கொண்டார். மீண்டும் அவர் தன் தற்பொழுதைய நிலைக்கு வந்துவிட்டிருந்தார். ''அன்பே சிவம்'' என்று உதடுகள் உச்சரிக்க அவர் அன்பில் மீண்டும் அடைக்கலம் புகுந்தார்.

www.padippakam.com



# ஆறாம் நாள்

அரூபன்

## முதல் நாள்

பெய்தது மழை. பெருகியது நீர். பூமி குளிர்ந்து மண் புழு பெருகலாயிற்று. காலம் மறந்து வீசியது காற்று. கனிகள் உதிர்ந்து அமிழ்ந்தன. இலைகள் மூலம் பெயர்ந்து மறைந்தன. பறவைகள் கூடுகளில் ஒடுங்கின. ஓயவில்லை மழை. மாந்தர் மழையை வெறுக்கத் தொடங்கிய பின்னர் உக்ரஹமடைந்தது மழை. ஒரு வேளை அம்மழையை பழநி விரும்பியிருக்கக் கூடும். பழநி இறந்து கிடந்தான்.

இத்தனைக்கும் மரணம் சம்பவிக்கக் கூடிய அளவிற்கான தேகம் கொண்டவனல்லன் அவன். எதிர் பாராத தருணத்தில் பெய்தது மழை.

அதனை தோட்டம் என்று சொல்வது தவறு. வனம். சிறு வனம். தூரத்தில் இருந்து பார்த்தால் ஆரம்ப கால ஓவியன் வரைந்த சித்திரம் போல் பொய் ரகஸ்யங்கள் நிரம்பிய வனம் அது. மாதுளை மரங்கள் வடக்கே வ்யாபித்து கொண்டிருந்தது என்றால் மேற்கில் தென்னை மரங்கள். மாமரங்கள் கிழக்கில் தொடங்கி தெற்கு வரையிலும் பரவி இருந்தன. ஆங்காங்கே ஒட்டடைகள் போல் கொடிகள். ஊடே சிறு பாத்திகள் அநேகம். மல்லிகை புதருக்கு சற்று மேற்கே தடாக சாயல் கொண்ட பெருங்கிணறு ஒரு பலா மரத்திற்கும் எலுமிச்சை மரத்திற்கும் இடையே அமைந்த மல்லிகை புதருக்கு சற்று ஒட்டி அவன் இறந்திருந்தான். எந்த இடத்தில் ரோஜா பதியன்களை நட வேண்டும் என்று விரும்பினானோ அந்த இடத்தில்தான் தேகம் கிடந்தது.

மழை வலுத்தது. பாதி உடம்பு நிலத்திலும் மீதம் நீரிலும் அமிழ்ந்திருக்க குயவன் செய்த கருப்பசாமியாய் கிடந்த அவன் தேகத்தின் கண்ணிற்கு தெரியும் பகுதிகளை கூட இலைகள் மூட ஆரம்பித்து விட்டன. பூமியிலிருந்து தோன்றுகிறானா? அல்லது மறைகிறானா? கேள்விகளை எழுப்பியபடி ஓய்ந்தது மழை. அக்ரஹாரத்தில் இறந்த முதல் பறையன் என்ற பெருமையை அவன் தேகம் தட்டிச் சென்றதால் அவன் மரணம் உலகிற்கு இரண்டு நாள் கழித்தே தெரிய வந்தது. பறைப் பிரேதத்தை தாங்கியதற்காய் அப்பூமி பல காலம் பசுமையை இழந்தது. மோப்பம் பிடிக்க முடியாத தூரத்தில் அந்த வனம் அமைந்து விட்டதால் நாய்கள் அழ முடியாமல் போயிற்று. மேலும் மழைக் காலமாதலால் சம்போகத்தில் ஈடுபட்டிருந்த நேரத்தில் அவை யமன் வரவை கவனியாது போயிருக்கலாம். ஆனால் என்னவாயிற்று பசுக்களுக்கு? இத்தனைக்கும் பழநி தன் வாழ்க்கையின் பெரும் பகுதியை அந்த கொட்டிலில் தான் கழித்திருந்தான்.

முடிவில் மரணத்தை அறிவித்தது அவன் மணமே.

வீட்டு அந்தணர் குடும்பத்தோடு வேறோர் ஊருக்கு சென்று தினங்கள் நான்கு ஓடிவிட்டன. அறிந்தே வந்தது போலும் மரணம். நாளை அவர்கள் வந்து விடலாம்.

## இரண்டாம் நாள்

வீடுகளின் கொல்லைபுறங்களிலேயே மணம் தன் பயணத்தை தொடங்கிற்று. முதலில் முகர்ந்தவர்கள் மலம் அள்ளும் ஒட்டன்கள். ஒட்டன்களிடமிருந்து கிளம்பி பால்காரர்கள் வழியாய் வதந்தி பரவலாயிற்று. முதலில் மணத்தின் பயண வேகம் மெல்லியதாக இருந்ததால் இறந்த பெருச்சாளி மணமென பொருட் படுத்தாது போயினர். மறு நாள் ராட்சத கொடியாய் விரிவாக படர்ந்த மணம் அண்டை வீடுகளை சீண்டலாயிற்று. காலாவதியான 'என்ஸைம்' வாடையே முதலில் எழுந்தது. பின் மாயா மாளவ கௌள' விலிருந்து கிளம்பும் இசைச் சாயல்

www.padippakam.com



களை போல் மணம் 'என்ஸைம்' வாடையை அடித்தளமாகக் கொண்டு பல அதீத வாடை களை சுமந்து கொண்டு விஷத்தை கக்கலா யிற்று. ஒட்டச்சி வனமொட்டிய சாக்கடையில் வினோதமான புழுக்கள் கிளம்ப கண்டாள். நாள் முடிவில் சாராய வாந்தியும் கர்ப்பிணி வாந்தி யும் ஒரு சேர என்ஸைமுடன் கலந்தது.

இரண்டாம் நாள் மதியம் மலம் அள்ளப்போன ஒட்டச்சி ஒருத்தி கடுமையான காய்ச்சலால் தாக்கப்பட்டாள். பிறகு ஒட்டன்கள் அந்த தெருவை புறக்கணித்து காய்ச்சலிடமிருந்து தப்பித்துக் கொண்டார்கள். மலம் கழிவறை களில் தேங்க ஆரம்பித்தது. மணத்தின் இரு கைகளும் அந்த தெருவை சுற்றி வளைத்துக் கொண்டு நகங்களால் கீற ஆரம்பித்தன. மண மூலத்தை ஓரளவு யூகிக்க முடிந்தாலும் வீடு பூட்டி யிருக்க, வீட்டு அந்தணர் மீது கொண்ட பயத் தாலும் மரியாதையாலும் புகார் நகராட்சியை சென்றடையவில்லை. பிரதி அருகாமை வீடு கள் தங்கள் இயலாமையை நொந்தவாறு பூட் டுக்களை தொங்க விட்டுக் கொண்டன.

## மூன்றாம் நாள்

மூன்றாம் நாள் காலையில் மேலும் பல வீடுகள் அடைத்துக் கொண்டன. முழுக் குடும்பத்தையும் மிஞ்சிய வீடுகளும் பழநியின் மணமும் வரவேற் றது.

திறக்கப்பட்டது வீடு.

ஈக்களும் பெயரறியாத சிறு பூச்சிகளும் வீட்டி னுள் சஞ்சரித்துக் கொண்டிருந்தன. ஒவ்வொரு அறையிலும் நாற்றம் அமர்ந்திருந்தது. மேலும் ஈக்கூட்டம் அந்த வீட்டினுள் நிரம்பிய வண்ணம் இருந்தது. தோட்டப் பாதை தவறிய ஈக்கள் குறுக்கே நின்ற வீட்டு மனிதர்களை சற்றே சீண்டிவிட்டு மீண்டும் பாதையில் மூழ்கின. கொடுமையான கனவுகளின் பின்னணியில் கூட அந்த மாதிரியான வாசனையை முகர முடியாது. நேரம் செல்லச் செல்ல மேலும் பல நரம்புகளை தன்னுள் முறுக்கி கொண்டது மணம். பகுத்துக் கூறும் ரசாயன அவதானிகள்கூட தவறும் அள வுக்கு இருநாட்களில் தன் வீர்யத்தை பெருக்கிக் கொண்டது மணம்.

பள்ளி கழிவறைகளில் காணக் கிடைக்கும் சிறு புழுக்கள் வனத்தில் ஊறிக் கொண்டிருந்தன. ஈத்திரையினுள் முக்காலும் இலைகளால் மூடப் பட்ட பழநியின் பிரேதத்தை பறவைகள் சில, கொத்திக் கொண்டிருந்தன. அது மாதிரியான ராட்சத பறவைகளை பிராந்தியம் அதற்கு முன் கண்டிருக்கவில்லை. உண்டு சிதறிய சதைகள் ஈக்களை திசைப் பயணத்திற்கு அழைக்கலா யிற்று.

நேற்று வரையிலும், மண்டியிருந்த மல்லிகை புதருள் மறைந்து வாழும் தேவதைகளுள் சில நாற்றம் பொறுக்க முடியாமல் தற்காலிகமாய் இடம் பெயர்ந்தன. மணத்தின் அடுத்த தாக்கு தல் புரியாது தவித்தது அக்ரஹாரம்.

பழநியின் மகன் மகாமுநிக்கு செய்தி சொல்ல வண்டி கொண்டு ஆள் பறந்தது. தோப்பை அடைந்தது வண்டி. தோப்பினுள் அமைந்த சக்கர வடிவ குடிசையது. மகாமுநி கயிற்றுக் கட்டிலில் கிடந்தான். ராக்கம்மா நெல் பரப்பிக் கொண்டிருந்தாள். ஆட்கள் சிலர் தேங்காய் உரித்துக் கொண்டிருந்தார்கள். நேற்று பெய்த மழையை தோப்பின் மேல் பகுதி வாங்கிக் கொண்டு மெதுவாய் கீழே இறக்கிக் கொண்டி ருந்தது. வண்டிக்குப் பின்னால் நாய் குரைத்துக் கொண்டிருந்தது.

மாமுநி !

ஓவ் யாரு?

நான் தான் கோவிந்தராசு வந்திருக்கேன்.

என்னய்யா !

பழநி போய்ட்டாப்ல.

யாரு?

உங்கப்பாரு மாமுநி.

எப்போ!

தெரியலை. ஐயர் வீட்டுலதான் போயிருக்காரு.

சரி போ.

அசைந்தான் கோவிந்தராசு.

ஐயரு உன்னைய கூட்டிட்டு வரச்சொன்னாங்க.

வர முடியாதுன்னு சொல்லு.

இல்லை, எப்படியும் கூட்டிட்டு வான்னாங்க.

www.padippakam.com



'சின்ன ஐயரு சம்சாரத்துக்கு நீதானாமே இப்போ எல்லாம்' தேங்காய் உரிப்பவர் ஒருவர் கேட்டார். கோவிந்தராசு நெளிந்தான்.

அவனை விடுங்கடா. டேய் ஐயரு கிட்ட நான் என்ன அவன் வெச்ச ஆளான்னு கேளு. போ இனிமே வராதே.

நெருப்பு வால்கள் அந்த பிராந்தியம் முழுதும் தோன்றியது. அனைவர் செவியலும் நுழைந்தது. பிராந்தியத்தை விட்டு காதை பொத்திக் கொண்டு வண்டி கொண்டு பறந்தான் கோவிந்தராசு.

பலர் சென்று திரும்பினர்.

ஐயரின் மூத்த மகன் இறுதியில் அடுத்த நாள் மகாமுநியை அழைத்து வந்தார்.

கிடைத்த மற்றுமோர் இரவை மணம் நன்கு பயன்படுத்திக் கொண்டது. வதந்திகள் பரவிய இடங்களிலெல்லாம் மணமும் பரவி வதந்தியை விழுங்கலாயிற்று. கொல்லைப் புறங்களில் மட்டுமே விரவியிருந்த மணம் வாசலிலும் தெருவிலும் நுழைந்தது. யாரும் தவிர்த்து விடலாகாது என்பதாய் உணவிலும் புத்தகங்களிலும் மணம் நுழையலாயிற்று. மேலும் மணம் அந்த வீதி பெண்களுக்கு கர்ப்பிணிகளின் சாயல்களை தொடர்ந்து அளிக்கலாயிற்று. பறவைகள் மாமிசத்தை தெருவிலேயே வைத்து உண்ண ஆரம்பித்தன. ஆயிரம் பெருச்சாளிகளின் பிரேத வாசனையை வீசியது அந்த ஒரு விரல். மழை வேறு சமயமறியாமல் பாலை பொழியலாயிற்று.

## *நான்காம் நாள்*

அக்ரஹாரம் அதற்கு முன் ஒரே சமயத்தில் அவ்வளவு பறையர்களை கண்டதில்லை. தங்கள் பதிவிரதா தர்மத்திற்கு ஊறு நேருமோ என பயந்த பெண்கள் ஜன்னல் கதவுகளை அடைத்துக் கொண்டார்கள். எப்படியும் பறையர்களின் வரவு தெருப் பெண்களின் வரும் வருடத்திற்கான கற்பனை களியாட்டங்களுக்கு போதுமானது. அவர்களின் தலைவன் என முன்னே நடந்து வந்தவன் ரெங்கன். மொத்தமாய் சிறு தொகையை பெற்றுக் கொண்டு மகாமுநியை ஸ்தலத்திற்கு அழைத்து வருவதற்கு மட்டும் உத்தரவாதம் அளித்தான் ரெங்கன். சாராயம் குடித்துக் குடித்து வீங்கின கன்னமும் வயிறும் கொண்டவனவன். பறைக் கிழவர்கள் சட்டை அணியாதவர்கள். ஐயர் வீட்டு வாசலில் ஒரு மூலையில் அமர்ந்து கொண்டு புகையிலை துப்பிக் கொண்டிருந்தார்கள். கைலியும் பனியனும் அணிந்த பறைக்குடி இளைஞர் பீடி புகைத்துக் கொண்டு அங்குமிங்கும் அலைந்து கொண்டிருந்தார்கள். மிஞ்சிய சிறுவர்கள் மின்சார கம்பங்களில் ஏறி இறங்கியும் நாய்களை கல்லால் அடித்தும் விளையாடிக் கொண்டிருந்தார்கள். நாயடிக்கும் விளையாட்டில் இளைஞர்களும் அவ்வப்போது கலந்து கொண்டார்கள். ஆங்காங்கே விளையாடிக் கொண்டிருந்த அந்தண சிறுவர்கள் வீட்டுக்குள் அழைக்கப்பட்டார்கள். பிரேத நாற்றம் பறையர்களை அவ்வளவாக இம்சிக்கவில்லை. ஒரு கூட்டம் சாராயம் குடிக்கச் சென்றது.

மணம் பின் தெருக்களிலுள்ள கொல்லை புறங்களுள் நுழைந்து பரவியது. நாற்றம் பரவிய இடங்களிலெல்லாம் ஒட்டன்கள் வேலையை புறக்கணித்தனர். திருவிழாக்கால கழிவறை போல மலம் தேங்க ஆரம்பித்தது. புகார் நகராட்சியை அடைந்தது. அப்பகுதி கவுன்சிலர் ஐயரிடமிருந்து லஞ்சம் பெற்றார். நாற்றம் பரவ பரவ கவுன்சிலர் பலர் பயனடைந்தனர். ஆங்காங்கே கொல்லை புறங்களில் பூனைகள் இறந்து கிடந்ததாக கிளம்பிய வதந்திக்கு ஏற்ப நரிக்குறவர்கள் அந்த பிராந்தியத்தில் அதிகம் தென்படலானார்கள். வீதி மனிதர்கள் குழந்தைகளை தூக்கிக் கொண்டு மருத்துவமனைகளுக்கு ஓடலானார்கள். காய்ச்சல் குழந்தைகளிடமிருந்து கிழவர்களுக்கு தொற்றிக் கொண்டது. கிழவர்களை தூக்கிக் கொண்டு ஓடமுடியாமல் வீதி மனிதர்கள் தவித்தார்கள். சாராயம் குடித்து திரும்பிய பறையர்களின் அட்டகாசமும் அதிகரிக்க, பொறுக்க முடியாத அக்ரஹாரம் காவல் துறைக்கு மொட்டை கடிதாசு அனுப்பியது. காத்திருந்த காவல் துறை அதிகாரிகள் அதிகமாக லஞ்சம் கேட்க, சுமாரான தொகை பேசி முடிக்கப்பட்டது.

பேச்சு வார்த்தை ஆரம்பமாயிற்று. மூத்த கிழவர்கள் மகாமுநியை சுற்றி வியூகம் அமைத்துக் கொண்டார்கள். நாய்கள் சுதந்திரமாய் உலவ ஆரம்பித்தன; அண்டை வீட்டு மாடிகள் விழித்துக்கொண்டன.

ஐயர்தான் பேச ஆரம்பித்தார்.

மகாமுநி, பழநி நாங்கள் தஞ்சாவூர் போயிருக்கும் போது இறந்திருக்கிறான். நல்லதுக்கோ, கெட்டதுக்கோ ரொம்ப நாளாய் எங்கள் வீட்டிலேயே இருந்திருக்கிறான். உனக்கும் உன் சனத்திற்கும் நாங்கள் புதியவர்கள் கிடையாது. துரதிருஷ்ட வசமாக நமக்குள் பிணக்கு ஏற்பட்டாலும் உன் மீதும் உன் சனத்தின் மீதும் எனக்கு எப்போதும் பிரியமும் மதிப்பும் உண்டு. பழநி எப்போது இறந்தான் என்று சரியாக தெரியவில்லை. பழநி எங்கள் வீட்டு மனிதனாகவே இது நாள் வரையிலும் வாழ்ந்து வந்திருக்கிறான். அவனை தகுந்த முறையில் அடக்கம் செய்ய வேண்டியது என் பொறுப்பு. அதனால் பழநியின் உடம்பை உரிய ஆளிடம் ஒப்படைக்க வேண்டி இருக்கிறது. அவனது அடக்கச் செலவை இந்த வீடு ஏற்றுக் கொள்ளும். தவிர அவனது சேமிப்பு என ரூபாய் ஐயாயிரம் என்னிடம் இருக்கிறது. அவனது வாரிசு என்பதால் அதுவும் உன்னைத்தான் சேர வேண்டும். மேலும் ப்ரேதத்தின் நிலை மிகவும் மோசமான சூழ்நிலைக்கு எங்களை தள்ளி விட்டிருக்கிறது. ஆக...

இடைமறித்தான் மகாமுநி.

''பணமோ பிணமோ என்னிடம் ஒப்படைக்க முடியாது. அந்த தகுதியை உங்காளு இழந்து விட்டான். எனக்கும் அவனுக்குமான உறவு அகன்று காலம் பல ஓடிவிட்டது.''

''அப்படியில்லையப்பா. நீ மறுத்தாலும் அவன் தான் தகப்பன்—அவன் இல்லாமல் நீ இங்கே நின்று பேசிக்கொண்டிருக்க முடியாது. அவனது அடக்கம் உன்னால் தான் நடக்க வேண்டும். வேறு யாரும் இதைச் செய்ய முடியாது. அது தான் தர்மம்.''

''தர்ம நியாயங்கெல்லாம் எனக்கு உதவுன இல்லை சாமி''

''புரிகிறது உன் கோபம் நியாயமானதுதான். ஆனால் சாவு எல்லாவற்றையும் கடந்தது அப்பா. உன்னை உற்பத்தி செய்த உடம்பிற்கான நன்றிக் கடன் ஐயா. நீதான் செய்ய வேண்டும்.'

''ஏன்யா உன் ரெண்டாவது பையன் பழநிக்கு பொறந்தவன் தானே. அவனை பண்ணச் சொல்லு'' ஒரு கிழவர் கத்தினார்.

ஐயர் தலை குனிந்தார். ஐயர் சன ஆடவர் குனிந்தனர்.

ஐயர் உள்ளே சென்றார்.

பிறகு ரெங்கன் உள்ளே அழைக்கப்பட்டான்.

அவனுடன் அவனது ஆட்களும் உள்ளே சென்றார்கள். அகலமாயிருந்தது வீட்டின் அந்தப் பகுதி. வீடு முழுவதும் நீரால் அலம்பி விடப்பட்டிருந்தது. ஊதுபத்திகளின் மணம் வீடு முழுவதும் தோல்வியடைந்தது.

ரெங்கா பாடியை முனிசிபாலிடில கொடுத்தால் போலிஸ் கேஸாயிடும். இப்பவே நிறைய அழுதாச்சு. உங்க ஆளுங்க வேறு யாரையாவது வைத்து முடிக்க முடியுமா சொல்லு.

எங்க சனம் எதுவும் மாமுநியை மீறி எதுவும் செய்யாதுங்க. வீணா பிரச்சனையை வளர்க்காதீங்க.

ரெங்கா நீ டரை பண்ணியான்னா முடியாதா சொல்லு. பழயபடிக்கு தோப்பு குத்தகைய நீங்களே எடுத்துக்கங்க. பழநியால் தானே நீங்க வெளிய போனீங்க. உங்களுக்கு என் மேல் விரோதமா! பழநி மேல் விரோதமா?

அதுக்கில்லை சாமீ, ரெங்கம்மா கர்ப்பிணியா இருக்கறப்ப உங்காளு உதைச்சு இல்ல கொன்னாரு சாமீதான அடைக்கலம் கொடுத்தீங்க. அவளோட சேர்ந்து பிள்ளையும் இல்லை போச்சு. அநாதையா இல்ல வளர்ந்துச்சு மகாமுநி. எப்படி சாமீ சனம் ஒத்துக்கும். வயசுல உங்க சம்சாரத்தோட சேர்ந்து என்ன ஆட்டம் ஆடினாப்ல பழநி. மக்கித்தான் அழுவனும். ஆளை விடுங்க.

வெளியே வெற்றிகரமாய் வந்து விழுந்தது ரெங்கன் கூட்டம். மகாமுநியை கணக்குபிள்ளை சமாதானப்படுத்த முயற்சித்துக்கொண்டிருந்தார். பழநியின் ஆத்மா திண்ணையில் அமர்ந்து அனைத்தையும் உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தது.

இறந்த பூனையொன்று பாதாள சாக்கடையில் அடைத்துக் கொண்டது. நீர் துவாரங்களை உடைத்துக் கொண்டு தெருவில் புகுந்தது. நாற

www.padippakam.com



றம் பொறுக்க முடியாத சிறு குருவிகள் வனத்துள் இறந்தன. ஆங்காங்கே பறந்து கொண்டிருந்த குருவிகள் 'தொப்' 'தொப்' என கீழே விழுந்து இறந்தன. ராட்சத பறவைகள் தெருவிலேயே அமர்ந்து கொண்டு சிறு பறவைகளை உண்ண ஆரம்பித்தன. ராட்சத பறவைகளின் நிழல்களால் இருண்டிருந்தது தெரு. பயந்தோய்ந்த சிறு பறவைகள் கூட்டம் கூட்டமாய் அப்பிரதேசத்தை விட்டு இடம் பெயர்ந்து, பொன் வண்டுகளாய் உருமாறி பிரதேசத்திற்கு திரும்பின. அவை பல காலம் பொன் வண்டுகளாகவே இருந்தன. ராட்சத பறவைகளின் சரணாலயமாக ஆனது பிரதேசம். பூச்சிகள் வனத்தின் எல்லா பகுதிகளிலும் புகுந்து விளையாடின. அப்போது வீழ்ந்த மலை வாழை இனம் பல காலத்திற்கு தொலைந்து போயிற்று. தடாக பெருங்கிணற்றில் பறவைகளின் சடலங்கள் நீர் திரையை மூடின. நீர் மட்டமும் மல மட்டமும் பிரதேச வீடுகளில் உயர ஆரம்பித்தன. மறுபடியும் தொடங்கியது மழை.

## ஐந்தாம் நாள்

எம்.எல்.ஏ. அடுத்த நாளே வந்து சேர்ந்தார். அவர் காரை சுற்றி வளைத்தது பறைக்குடி. விலக்கி ஐயர் வீட்டுக்குள் சென்றார். பிறகு சிறிது நேரத்தில் மகாமுநியையும் ரெங்கனையும் தனியே அழைத்தார்.

என்ன மாப்ள, ஏதோ நடந்திடுச்சி. மொத்தமா பணம் வாங்கிட்டு உட்ற வேண்டியதானே, என்ன மாமா.

இல்லை அப்பாவு, இப்ப வுட்டா அவனுகளை எப்பவும் பிடிக்க முடியாது.

அதுக்கில்லை மாமுநி, உம்மேலயும் நாலஞ்சு கேஸு இருக்கு. ஐயர்ட்ட சொல்லி எல்லாத்தையும் பைசல் பண்ணிறலாம். எதுக்கு வரலச்சுமியை வேணாங்கனும், என்ன நான் சொல்றது மாமா.

என்னய்யா, கேஸை காட்டி ஐயன் மிரட்றானா அதை எனக்கு பாத்துக்க தெரியும்.

ரெங்கன் அப்பாவுவிடம் முணுமுணுத்தான்.

என்ன அப்பாவு, இது என்ன இப்ப தீர்மானிச்ச முடிவா. இதுல மகாமுநிக்கு மட்டும் தான் இஷ்டமில்லைன்னு நினைச்சயா, நம்ப சனம் ரொம்ப கொதிப்புல இருக்கு. நாம வேணாம்னு நாயக்கன வெச்சுகிட்ட ஆளுதானயா அவன். நீயும் பறையன்தான. நீ எங்க பக்கட்டுல்ல இப்ப நிக்கனும். அது வுட்டு புட்டு நீ என்னென்னமோ பேசற. உனக்கு பிரச்சனைன்னா நீ சம்பந்தப் படாதே. ஐயன் குருப் நமக்கு எகின்ஸ்டுதான் எப்பவும். கரிசனம் எல்லாம் இப்படித்தான் பிரச்சனையினால. நீ என்ன பண்ணினாலும் அக்ரார ஓட்டு நமக்கில்லை ஆமாம். இத நம்பி நம்ம சன ஓட்டை கோட்டை வுட்றாத சொல்லிப்புட்டேன். பறையன்னால அவனுகளுக்கு ஒரு இளக்காரம் உண்டு. ஒரு பறையனும் இதுல அவனுக பக்கம் இல்லாம நான் பாத்துக்கறேன். நீ முடிஞ்சா இப்படி வந்து பக்கத்துல நில்லு. இல்ல பேசாம கிளம்பு.''

எம்.எல்.ஏ. வெளியேறினார்.

தங்கள் மொட்டை கடிதாசுகளினாலும் புகார்களினாலும் தொடர்ந்து தோல்வியடைந்த அக்ரஹாரம் கும்பலை விரட்டிக் கொண்டு ஐயர் வீடு நோக்கி நகரலாயிற்று. ஐயர் நிலை கண்டு வாய் பொத்தி அடங்கியது அக்ரஹாரம். நாற்றம் கடை வீதிகளுள் நுழைந்தது. வெளியிலும் நாற்றம் பரவியது. வாதம் தொடர்ந்தது. இடப் பெயர்ச்சி பற்றி தேவதைகள் பேச ஆரம்பித்தன.

ஐயர் மகாமுநி வாதங்கள் மரங்கொத்தியாய் உருவெடுத்தன. தோட்டத்துள் பறந்தன. பின் பழநியின் கபால பகுதியை கொத்த ஆரம்பித்தன. ஆத்மா அலறலாயிற்று. அங்கே இறந்து கிடந்த வெளவாலின் உடலில் கூடு புகுந்த பழநியின் ஆன்மா தேவதைகளின் தலைவி முன் மண்டியிட்டு அழ ஆரம்பித்தது.

மகாமுநியின் கூட்டம் அடக்கம் செய்ய முடியாதென உறுதியாய் நின்றது. ஐயரின் சம்பிரதாயம் ப்ரேதத்தை தொடக்கூட அனுமதிக்கவில்லை. ஐயர் சனம் பிணமெரிக்க ஆள் தேடி அலையலாயிற்று. தடுக்கக் கிளம்பியது பறைக்குடி.

வனத்துக் கிணறு நிரம்பி வழிந்தது. மலக் கிடங்குகள் உடைத்துக் கொண்டன. பழங்களுள்

www.padippakam.com



பூச்சிகள் புகுந்தன. பூக்கள் கொசுக்களால் சூழப்பட்டன, பல வருடங்கள் அவ்வனம் பசுமையைக் காண முடியாதபடி பூச்சிகள் துவம்சம் செய்து கொண்டிருந்தன.

மரங்கொத்திகளின் எண்ணிக்கை பெருகலாயிற்று.

## ஆறாம் நாள்

தேவதைகள் தீர்மானித்தன. ஒரு தேவதை ஈக்களையும் மரங்கொத்திகளையும் பழநியிடமிருந்து பிரித்தது. இன்னொன்று மந்திர குளிகை ஒன்றை பழநிக்கு ஊட்டியது. ஆன்மா பழநியுள் புகுந்தது. பழநி உயிர் பிழைத்தான்.

காற்று வீசியது பலமாய். பசுக்கள் கதறலாயின. பழநி கண்களால் தோட்டத்தை ஒரு முறை வலம் வந்தான். கண்களை மூடிக் கொண்டான். பூமியில் நாசமான ரோஜா பதியன்களை கையிலெடுத்து கண்ணருகே வைத்து பின் எறிந்தான். கொட்டில் வழியை புறக்கணித்து வீட்டு வழியாய் வாசலை அடைவது என தீர்மானித்தான். ஓசைகளைக் கூர்ந்து கேட்டு வாசலைக் கண்டு பிடித்தான். சதை வந்த வழியெங்கும் உதிர்ந்து கொண்டே வந்தது.

ஈக்களும் பெரும் பறவைகளும் அவனை தொடர்ந்து வீட்டினுள் நுழைந்து சிதறின. ஐயர் வீடு அலறியது, வாசலில் குழுமியிருந்த பறைக்குடியையும் தன் மகனையும் கண்டான். பறைக்குடி பயந்து விலகியது. சதையும் மண்ணும் உதிர உதிர ஓடலானான். வீதிக் கதவுகள் திறந்து திறந்து மூடப்பட்டன. பறவைகளின் நிழல்கள் மயானம் நோக்கி பறக்கலாயிற்று. குழி வெட்டிக் காத்திருந்தன தேவதைகள். குழியுள் பாய்ந்தான். பறவைகள் வட்டமிடலாயின. தேவதைகளுக்கும் தன்னை இது காறும் காத்த பழநியின் உடம்பிற்கும் நன்றியைத் தெரிவித்து விட்டு தன் பிறவியை நொந்தவாறு ஆத்மா விண்ணிலே மறையலாயிற்று.

●●●

---


லண்டன் வாழ் இலங்கைத் தமிழ் மக்களின் வாழ்நிலைகளையும் மன உணர்வுகளையும் சித்தரிக்கும் நாவல்

*ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம்*

*எழுதிய*

**உலகமெல்லாம் வியாபாரிகள்**

பக் : 212; விலை: ரூ 22-00

○ ○ ○

கிடைக்குமிடம் :

வயல்

5 கச்சேரி சந்து
மயிலாப்பூர்
சென்னை 600 004


படிப்பகம்

www.padippakam.com

# சாதனையாளர் வசந்தா

''சிக்னலுக்காக'' கார் நின்று கொண்டிருக்கிறது. வழக்கம் போலவே விடுப்புப் பார்ப்பதற்காக வலது புறம் திரும்பிப் பார்த்த போது அருகில் நிற்கும் காரில் என்னுடன் வேலை பார்க்கும் ஒரு பிரெஞ்சுக்காரர். கையை அசைத்து அவரின் கவனத்தை ஈர்க்கப் பார்க்கிறேன். மனிதர் என் பக்கமே திரும்பவில்லை. குண்டு குண்டாக பெரிய கண்களிரண்டும் மாறி வெளியே வந்துவிட்டிருக்க ஏதோ ஆழ்ந்த சிந்தனையிலிருந்தார். எப்படியாவது சிக்னல் விழுவதற்கு முன்பு அவருக்கு 'ஹாய்' சொல்லிவிட வேண்டு மென்று நான் எடுத்துக் கொண்ட முயற்சிகளைப் பார்த்த வசந்தா ''விடுங்கள், மனிதர் ஏதோ 'கண்பியூஸ்ட்'டாக இருக்கிறார் போலும்'' என்றாரே பார்க்கலாம். அவருடைய பெருத்த கண்களைக் குறிப்பிட்டு 'Confuse' என்ற சொல்லை அழுத்திச் சொன்ன விதம் சில மணி நேரங்களுக்கு என்னைச் சிரிப்பில் ஆழ்த்தியது.

யார் இந்த வசந்தா?

சிவப்பு நிற 'செவர்லட்' காரில் அதீதமான நகைச்சுவை உணர்வுகளுடன் வாழ்க்கையின் சகல பிரச்சனைகளையும் மிக இலகுவாக எடுத்துக் கொண்டு, பெரிய பெரிய கலா சிருஷ்டிகளைச் சாதித்துக் கொண்டு மொன்றியால் முழுவதும் சுற்றி வரும் ஒரு ஜீவன். மெலிந்த தேகம். கொஞ்சம் பலமாகக் காற்றடித்தாலே பறந்து போய்விடக் கூடிய நிலைமை. இந்தச் சின்ன உருவத்துக்குள்ளிருக்கும் அபார சக்தியை நினைத்து வியக்கிறேன். வாரத்தில் எட்டு நாட்கள் இருக்கக் கூடாதா என்று அங்கலாய்த்துக் கொள்ளும் கடின உழைப்பாளி.

கேரள மாநில எர்ணாகுளத்தில் தென்னிந்தியா முழுவதும் பிரபலமான 'கலாஷேத்ரா விலாசினியிடம்' ஆறு வயதில் நடனம் பயில ஆரம்பித்தவர் பத்தாவது வயதில் கேரள கலா மண்டபத்தில் சுத்தமான கதகளி, மோகினி ஆட்டம் எல்லாம் பயின்று பதினாலாவது வயதில் அரங்கேற்றம் செய்த பின்பு வழக்கம் போலவே எல்லாவற்றையும் விட்டு விட்டு திருமணமாகிக் கனடா வந்து மூன்று குழந்தைகளுக்குத் தாயுமானார்.

குழந்தைகள் வளர்ந்தனர். கனடாவில் பிறந்து, கனேடிய கலாச்சாரத்தின்படி ''பாலே'' பயின்று கொண்டிருந்த போதில இந்தத் தாய் மட்டும் எர்ணா குளத்தையே சுற்றிச் சுற்றி வந்து மனதால் வாழ்ந்து கொண்டிருந்தார். இந்த ஏக்கங்கள், இயல்பாக இரத்தத்தில் ஊறிய கலைத்தன்மை எல்லாம் சேர்ந்து மூன்று சிஷ்யர்களுடன் (தன் பிள்ளைகள்) பரதம் கற்பிக்க ஆரம்பித்தார்.

முதலில் பரத நாட்டிய வீடியோக்களைப் போட்டு மூவரையும் அவ்வப்போது பார்க்க வைத்து அவர்கள் அதை எப்படி ரசிக்கிறார்கள், ஏற்றுக் கொள்கிறார்கள் என்பதை நன்கு அவதானித்து அவர்களுக்கும் அதில் ஈடுபாடு இருக்கிறதென்பதைப் புரிந்து கொண்ட பின்பு கற்றுக் கொடுக்க ஆரம்பித்தார். கலையைத் திணிக்கக் கூடாதென்பதில் சராசரி இந்தியத் தாய்களை விட வேறு பட்டு நிற்கும் வசந்தாவின் இந்தத் தன்மை அவரின் மனமுதிர்ச்சியைக் காட்டுகிறது.

இதே பாணியில் அயலில் உள்ள சில குழந்தைகளையும் இனங்கண்டு கொண்டு எண்பதாம் ஆண்டில் நிருத்தியாலயா நடனப் பள்ளியை ஆரம்பித்து படிப் படியாக வளர்த்தெடுத்து தன் அயராத உழைப்பினால் இந்த பத்து வருடங்களில் பதினைந்து மாணவர்களுக்கு அரங்கேற்றமும் செய்து வெற்றிகளைக் குவித்துக் கொண்டிருக்கிறார் இந்த வசந்தா கிருஷ்ணன்.

ஆண்களும் பெண்களுமாக சுமார் எண்பது பேர் நிருத்யாலயாவின் மாணவர்கள். இதை விடவும் ஒரு சிறப்பம்சம், இதுவரை காலமும் ஒலிப்பதிவு செய்யப்பட்ட பாடல்களை உபயோகப் படுத்தியவர் இப்போது உயிரோட்டமான live music. ஐந்து கலைஞர்களடங்கிய ஒரு இசைக் குழுவும் நிருத்யாலயாவுக்கென இருக்

www.padippakam.com



பத்திலேயே முடங்கிப் போயின. இதையும் மீறி வெளி வந்த "The boys in the band" "A Torch Song Trilogy" "Making Love" போன்றவை படுதோல்வியடைந்தன. இத்தனைக்கும் இப் படங்களில் இப்பிரச்சனை மிகக் குறைந்த அளவே தொட்டுக் காட்டப்பட்டிருந்தது,

83,200 அமெரிக்க உயிர்களுடன் பேரம் பேசிக் கொண்டிருக்கும் எய்ட்ஸ் இன் தீவிரம் பற்றி— இந்தத் தொகை மொத்த வியட்நாம் யுத்த இழப் புகளைவிட மிக அதிகமானது — ஹாலிவுட் இப்போது உணரத் தலைப்பட்டுவிட்டது. அடை யாளம் காணவும் முயல்கிறது. உலகம் முழுவ திலும் 2000 ஆண்டளவில் ஆறு மில்லியன் மக்கள் எய்ட்ஸ் நோயால் பீடிக்கப்படுவார்க ளென்று—ஏற்கனவே மில்லியனுக்கு மேற்பட் டோர் இறந்தும் விட்டார்கள்—உலக சுகாதார நிறுவனம் கணித்திருக்கிறது. ஹாலிவுட் ஆவது காப்பாற்றட்டும் !

○ ○ ○

---

## கவிதைகள்

**சமயவேல்**

### அரைக் கணத்தின் புத்தகம்

ஏய் நில், நில்லு—
சொல்லி முடிப்பதற்குள்
மாடிப்படிகளில் என் குட்டி மகள்
உருண்டு கொண்டிருக்கிறாள்

பார்த்துக் கொண்டு மட்டும் நான்—
இல்லை
என் சகலமும் கூட்டி
உருள்கிற மகளை
எட்டிப் பிடிக்க தாவுகிறேன்

ஒரு வீறலுடன் அக்கணம் உடைய
நெற்றியில் ரத்தமுடன்
அழும் மகளை அள்ளுகிறேன்

என் பிரபஞ்சத்தைச்
சேராத என் கை வசப்படாத
அந்த அரைக் கணத்தை ஒரு
புத்தகத்தில் குறித்து வைத்தேன்

ஒரு சொடுக்கில், இழுப்பில், புரட்டலில்
முழுச் சித்திரமே மாறிவிடும்
வினோதப் புத்தகம் அது.

### கடைப் பெண்ணுக்கொரு பாட்டு

கண்களைக் கொண்டு மட்டும்
உயிர் வாழ்ந்து வருகிறாள் ஒரு கடைப் பெண்

ஆயிரக் கணக்கில் பார்வைகள்
உராய்ந்து விழுந்து புரண்டு
அகன்று விரிந்த கண்கள்
முகம் தாண்டி கடை தாண்டி
தெரு முழுவதும் அசைகின்றன

வியாபாரம் தலை விரித்தாடும்
தெருக்கள் தோறும்
விடாமல் விரட்டுகின்றன
கடைப் பெண்ணின் கண்கள்

விழியின் வெள்ளைக் கண்மாய்
என்னை முழுசாய் விழுங்கத் துடிக்கிறது
கருப்பு விழிக்குள்
காதலை காலுக்குப் போட்டு
ஜம்மென்று உட்கார்ந்திருக்கிறது
மரணம் போல் ஒன்று

மௌனமாய் வெடிக்கிறது
அவளது உயிரின் கதறல்
ஒரேயொரு துளி உயிர்க் காதலுக்காய்
பிரபஞ்சம் முழுவதும் பாய்கிறது
அவள் பார்வை
சுக்கல் சுக்கலாக உடைந்து
சிதறுகிறேன் நான்.

www.padippakam.com

# கார்கோடன் குறிப்புக்கள்

இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்திற்கு மான இயக்கத்தின் (MIRJE) தேசிய கமிட்டி உறுப்பினரும் மனித உரிமைகளுக்காக தொடர்ந்து குரல் எழுப்பினவரும் மனித உரிமையாளருமான திரு குமார குரு குக மூர்த்தி செப்டம்பர் 6ம் திகதி 1990 வியாழக் கிழமை பி.ப. 5.30 மணியிலிருந்து காணாமல் போய் உள்ளார்.

இலங்கை ஒலிபரப்புக் கூடத் தாபணத்தின் தமிழ்ச் சேவை நிகழ்ச்சி தயாரிப்பாளரான திரு குக மூர்த்தி கொழும்பு (இலங்கை) ஐரவத்தை வீதியில் மோட்டார் சைக்கிளில் வந்து கொண்டிருந்த போது 9 (சிறி) 916 இலக்க மிட்சுபிசி ஜீப் வண்டியில வழி மறித்த சீருடையில்லாத இனம் தெரியாத குண்டர்களால் பலாத்காரமாக இழுத்து ஏற்றப்பட்டுள்ளார். இந்தக் குண்டர்களில் ஒருவர் மட்டும் காக்கி சீருடை அணிந்திருந்தார்.

இச் சம்பவத்தின் பின் திரு குக மூர்த்தி பற்றி எவ்வித தகவல்களும் தெரியாதுள்ளது. இலங்கையின் தலைநகரில் வைத்து நடைபெற்ற இச் சம்பவம் இலங்கை அரசாலே நடத்தப்பட்டது என நம்பப்படுகின்றது.

திரு குக மூர்த்தி இவ்வாறு கடத்தப்பட்டது பற்றி இலங்கையிலும் வெளிநாடுகளிலும் உள்ள மனித உரிமை அமைப்புகள் கண்டித்துள்ளன. இவரை விடுவிக்க காத்திரமான நடவடிக்கைகளில் ஈடுபடுமாறு இலங்கை அரசைக் கோரி உலகின் பல பாகங்களிலிருந்தும் தந்திகள் கடிதங்கள் அனுப்பப்பட்டு வருகின்றன. இந்த மனித உரிமையாளர் உயிருடன் மீட்கப்பட வேண்டும்.

● ● ●

குழந்தைகள் அழுகின்றன. பசி!...பசி! ..பசி!... அடுப்பு எரிந்து நாட்களாகின்றது. வயல்களில் நெற்கதிர்களுக்குப் பதிலாக நெருப்பு மட்டுமே எஞ்சி இருக்கின்றது. மரணங்கள், துயரங்கள், அவல ஓலங்கள் கேட்டுக் கொண்டேயிருக்கிறது. யாருக்கு, யார் ஆறுதல் சொல்வது. எலிகளைப் போல் நிலத்துக்குள் பதுங்கியபடி ஒரு வாழ்க்கை.
சொந்த நம்பிக்கைகளை இழந்து போன தேசம்; ஏன் என்ற கேள்வியை எழுப்பக் கூட சுதந்திரம் மறுக்கப்பட்ட நிலம். ''இனியெல்லாம் உன் செயல்'' என்று வானத்தை நோக்கி அண்ணாந்து பார்க்கக்கூட முடியவில்லை. எரிகின்ற குண்டுகளை பொழிந்த வண்ணம் யுத்த விமானங்கள் வானத்தில் வட்டமிடுகின்றன.

இங்கு (கனடாவில்) நாங்கள் என்ன செய்து கொண்டிருக்கிறோம்? ஒவ்வொருவரும் தங்களுடைய மனச்சாட்சியை தொட்டு கேட்டுக் கொள்ள வேண்டிய கேள்வி. எமது நிலத்தில் வாழ்வதை விரும்பாமல், எம் மக்களின் துயரங்களுடன் பங்கு கொள்ள முடியாமல் புலம் பெயர்ந்து ஓடி வந்தவர்கள் நாங்கள். துயரங்களைச் சுமக்க முடியாமல் சுமந்து கொண்டிருக்கின்ற எமது மக்களுக்காக இங்கிருந்து கொண்டாவது நாம் அரும்பளவேனும் ஏதாவது செய்திருக்கிறோமா?

எமது மக்களுக்காக நாம் இங்கிருந்து செய்யக் கூடியது நிறைய உள்ளது. கனடாவில் மட்டுமல்ல நமது மக்கள் புலம் பெயர்ந்து வாழும் ஒவ்வொரு நாட்டில் இருந்தும் நமது மக்களுக்காக செய்யக் கூடியவை ஏராளம்.

● ● ●

இயந்திரமாய் இயங்கிக் கொண்டிருக்கும். ரொறண்டோ நகரில் (கனடா) (3.06.1990) ஞாயிற்றுக் கிழமை மாலை நேரம். வாகனங்களும் அன்று ஓய்வெடுக்காது ஓடி இரைச்சலைக் கிளப்பிக் கொண்டிருக்க ஐம்பதிற்கும் குறையாத மனிதர்கள் மட்டும் அங்கு ஆர்வத்தோடு கூடியிருந்தனர். கவியரசன் சேரனின் நான்காவது கவிதை தொகுப்பான 'எலும்புக் கூடுகளின் ஊர்வலம்' அங்கு பிரசவித்துக் கொண்டிருந்தது.

எட்டு கவிதைகளைத் தாங்கி, இருபத்தி இரண்டு பக்கங்களில் அடக்கமாக அழகாக இத்தொகுப்பு வெளிவந்துள்ளது.

www.padippakam.com



இத் தொகுப்பில் உள்ள கவிதைகளெல்லாம் குறிப்பிட்ட காலத்திற்குரிய நிகழ்ச்சிகளை, உணர்வுகளை எடுத்துக் கூறுகின்றன. இந்திய இராணுவம் இலங்கையின் வடக்கு, கிழக்கு பகுதிகளில் இருந்த சூழ்நிலையே இது.

சேரன் ஒரு கவிஞர். கவிநயத்தோடு நிகழ்வுகளை இலக்கியமாக்கி உணர்வுகளைத் தட்டியெழுப்பும் சக்தி படைத்தவர். இவரது முன்னைய படைப்புகள் இன்றும் ஈழத்திலும், தமிழகத்திலும் இவற்றுக்கப்பால் தமிழர் புலம் பெயர்ந்த நாடுகளிலெல்லாம் பேசப்படுகிறது. எலும்புக் கூடுகளின் ஊர்வலத்திலும் சேரனின் கவிதைகளின் சிறப்பை காண்கின்ற போதும் சில கவிதைகளைப் பொறுத்த வரை இவற்றைவிட சேரனின் ஏனைய கவிதைகள் சிறப்பானவை என்ற அபிப்பிராயத்தை ஏற்படுத்துகின்றன. கவியரசனின் கவனத்துக்கே இந்தக் குறிப்புகள்.

சிம்மாசனமும் சவப் பெட்டியும் என்ற கவிதையின் உருவத்தை சேரன் மாற்றியுள்ளார். இது ஏற்கனவே பல 'கவிஞர்கள்' முயற்சி செய்து தோற்றுப் போன முறையாகும். இந்த வகையிலான படைப்பு வாசகனுக்கு கவிதையின் சிறப்பினையும் மழுங்கடித்துவிடும் என்றே கருதுகிறேன்.

மூன்று அடிக் குறிப்புகளுடன் எழுதப்பட்டு அறிமுகப் படுத்தப்பட்டுள்ள கவிதைப் பாணி வளர்ச்சி அமையக் கூடியதாயே தெரிகின்றது.

இக் கவிதை வெளியீட்டரங்கில் '80களில் அரசியல் போராட்டங்களைப்பற்றியும் அதன் மீதான நம்பிக்கைகளை பற்றியும் கவிதைகள் வெளி வந்தன. இன்று மேலோங்கி நிற்கின்ற அராஜகத்தைப் பற்றியே கவிதைகள் கூறுகின்றன' என ஒரு விமர்சகர் குறிப்பிட்டார். அப்படியானால் தேசவிடுதலைப் போராட்டம் முடிந்து இப்போ அராஜகத்துக்கான போராட்டமா நிகழ்கின்றது என்று ஒரு கேள்வியும் அரங்கில் எழுப்பப்பட்டது. நேரமின்மையால் இது விவாதிக்கப்படவில்லை. அந்த வெளியீட்டு அரங்கில் மட்டுமின்றி எங்குமே இந்தக் கேள்வி இன்று எழுப்பப்பட்டுக் கொண்டிருக்கிறதை காண முடிகிறது. இது பற்றிய தெளிவை ஏற்படுத்திக் கொள்ளாதவர்கள் நமது மக்களின் நலனுக்கு எதிரானவர்களாகவே செயற்படுவார்கள்.

புலம் பெயர்ந்துள்ள நாடு ஒன்றிலிருந்து கவியரசனின் அரசியல் கவிதைகளின் தொகுதி ஒன்று வெளியிடப்படுகின்றது என்பது புலம் பெயர்ந்துள்ளோர் மத்தியில் எழுந்துள்ள கலை இலக்கிய அரசியல் ஆர்வத்தை தெளிவாகவே இனம் காட்டுகின்றது.

● ● ●

ஒவ்வொரு நாளும் எட்டு மணி நேரம் (சிலர் இன்னமும் அதிகமாயே) உழைக்கின்றோம். சமையலறை, குளியல் அறையில் நேரத்தை செலவிடுகிறோம். தொலைக் காட்சி பெட்டிக்கு முன் ஒவ்வொரு நாளும் ஒரு மணி நேரமாவது குந்தியிருக்கிறோம். வாராந்தம் நண்பர்கள் வீடு, திரைப்படம், ஷொப்பிங், என்று அலைகின்றோம். வசந்த காலம் வந்துவிட்டாலே நாம் வாழும் நகரத்திலிருந்து 300, 400, கிலோ மீட்டர் கடந்து வேறு நகரங்களை பார்வையிட சென்று வருகிறோம். பாலசுப்ரமணியம், ஜேசுதாஸ், கங்கை அமரன் என்று எல்லா நிகழ்ச்சிகளுக்கும் போகின்றோம். கனடாவில் பார்த்து முடிக்க வேண்டிய இடங்கள் என்று ஒரு பெரிய லிஸ்டே வைத்துக் கொண்டு பார்த்து வருகிறோம். சனி, ஞாயிறு என்றால் பகல் பன்னிரெண்டு மணிக்குத் தான் தூக்கம் விட்டு எழுகிறோம். இவ்வளவுக்கும் நேரத்தை செலவழிக்கும் நாம் ஒரு வாரத்தில் ஒரு மணி நேரத்தையாவது எமது சொந்த தேசத்தின் மக்களுக்காக செலவழிக்கின்றோமா? ஒரு மாதத்தில் ஒரு 4 மணி நேரத்தை உங்களால் தேசத்திற்கு என ஒதுக்கி பயனுள்ள வகையில் செயற்பட முடியாதா? சிந்தியுங்கள்!!

● ● ●

கனடாவில் தமிழர்கள் அதிக எண்ணிக்கையில் புலம் பெயர்ந்து வந்து சேர்ந்த பின் முக்கியமாக ஒன்றை அவதானிக்கக் கூடியதாய் உள்ளது. தென்னிந்திய சினிமாப் பாடகர்கள், நட்சத்திரங்கள், இசையமைப்பாளர்கள் எல்லாம் அடிக்கடி இப்போ கனடாவுக்கு விஜயம் செய்து கொண்டிருக்கின்றனர். இவர்களது நிகழ்ச்சிகளுக்கு கடைசி நேரத்தில் டிக்கட் கிடைக்காமல் ஏமாற்றம் அடைந்தவர்கள் ஏராளம். இது போதாது என்று இந்த தென்னிந்திய சினிமாப் பாடல்களை தாம் பாடி கனடாவில் மேடை ஏற்றி பூரித்துப் போகின்ற சில (உள்ளூர்) டப்

பாங் குத்து இசைக் குழுக்கள் இங்கு உருவாகி வருகின்றன. தென்னிந்திய சினிமா தாரகை களின் நிகழ்ச்சிக்கு உள்ள வரவேற்பு இந்த நிகழ்ச்சிகளுக்கும் உள்ளது.

நமது மக்கள் எங்கே போகின்றனர்? என்று ஏராளமான உள்ளங்கள் தவித்துக் கொண்டிருக் கின்றபோது ஐப்பசி-06, 1990ல் எங்கள் மண் ணும் இந்த நாட்களும்'' என்ற நிகழ்ச்சி கலை இலக்கிய மன்றத்தில் ரொறண்டோ நக ரில் நடத்தப்பட்டது.

''துன்பங்களுக்கும் துயரங்களுக்கும் இடையில் நின்று ஆடுகின்ற வாழ்க்கையை, இவற்றை கடந்து எதிர் காலத்திற்கு இட்டுச் செல்லும் வலிமை மிகுந்த கருவிகளாக கலை இலக்கியம் இருக்க வேண்டும்'' என்ற அறைகூவலோடு நடத்தப்பட்ட இந்நிகழ்ச்சி உண்மையிலேயே கனடாவில் வித்தியாசமானதாய் அமைந்தது. நாடகம், கவிதா நிகழ்வு, நாட்டியம், பாரதி யார் பாடல்கள் என்று நடத்தப்பட்ட இந்நிகழ் சிகள் எங்கள் தேசத்திற்கு எம்மை அழைத்துச் சென்றன.

கலை இலக்கிய மன்றத்தினர் மக்களுக்கான கலைப் படைப்புகளை படைத்துள்ளனர். இப் படைப்புகள் சிறப்பானவை என்பதில் சந்தேகம் இல்லாத போதும் இன்னமும் செழுமையடைய நிறைய இடம் உண்டு என்பதை மன்றத்தினர் உணர்ந்திருப்பார்கள். எதிர் காலத்தில் இவர் களிடம் இருந்து இன்னும் அதிகமாக எதிர்பார்க் கலாம்.

● ● ●

காலம் முதலாவது இதழ் வெளி வந்த பின் பல வாசகர்கள் ஆசிரியருடன் கடிதம் மூலமாகவும் தொலை பேசி மூலமாகவும் தொடர்பு கொண்ட தாக காலம் ஆசிரியர் கூறினார்.

பெரிதாக வரவேற்பு கிடைக்கா விட்டாலும் ஆங்காங்கே சில வரவேற்புக்கள் கிடைத்தது அறிய முடிகிறது. இந்த இதழ் முன்னதை விட சிறப்பாக வரும் என எண்ணுகின்றேன். காலம் பற்றி நல்லது கெட்டதை எழுதுங்கள்.

அடுத்த இதழில் சந்திப்போம்.

● ● ●

# விக்ரமாதித்யன் கவிதைகள்

## கடந்த காலம்

பொதிகை மலை உச்சியிலிருந்து
புறப்பட்டு வரும் ஆறு

மலையில் சமைந்த குமரி
சமவெளியில் புதுப்பெண்

எங்கள் தாமிர வருணிக்கு
எத்தனை சாயல்

காட்டுக்குள் தனியே
குடிகொண்டிருக்கிறான் சொரிமுத்தையன்

ஆடி அமாவாசை நாளில்
ஆடு வெட்டிக் கும்பிடுவார் வீர மறக்குடி
மக்கள்

நதியின் செம்மண் நீரோடு சேர்ந்து
ரத்த நதியும் கலந்து ஓடும் புது வர்ணத்தில்

தர்பார் உடையுடன் வந்து
காட்சி தருவார் சிங்கம்பட்டி ராஜா

பதினெட்டு கிராமம்
பாங்குடன் இருந்த ஊர்

வாய்க்கால் தாண்டி
ஆறு

பச்சை வயல் மனது படைத்த
ஜனங்கள்

அக்ரஹாரம் எடுபட்டதும் ஊர்
அம்சமே அழிந்து போயிற்று

பஞ்சம் பிழைக்கப் பட்டணக்கரைகளுக்கு
போய்ச் சேர்ந்தன பிராமணக் குடிகள்

வரலாற்றுச் சக்கரச் சுழற்சியில்
வந்தது வேதியர்களுக்குப் பின்னடைவு

ராஜரீகம் நசிந்தது போல
நசிந்து போயிற்று பிராமணீயமும்.

○ ○ ○

ஆளுங்கட்சிக்காரன்கள் மனம் போல
மேய்ந்து விட்ட காடுகள்

அதனால்
பொய்த்துப் போகும் மழை

அருவிக்கரை வரையிலும்
சிற்றில்கள் கடைகள்

வயற்காடுகளை அழித்து
திரையரங்குகள் கட்டடங்கள்

சலவைக்கற்கள் பதித்து
குழல்விளக்குகள் பளிரிடும் கர்ப்பகிருகங்கள்

ஆறு குளம் வாய்க்கால்களில் குளித்தது
அந்தக் காலம்

உத்தரவாதம் உண்டு
ஒரு வாளித் தண்ணீர்

போயே போயிற்று
மண்பானைச் சமையல்

வந்துவிட்டது
குக்கர் பொங்கல் சோறு

எவர்சில்வர் பாத்திரங்களில்
கறி புளி வகை

பழைய காலத்து மனுஷன்
நான்.

www.padippakam.com



## இன்னொரு நாள்

எப்போதோ
போய்விட்டிருந்தது அந்திக் கருக்கல்

முன்னிரவுக்கென்று அங்கே
பெரிய அடையாளம் ஒன்றுமில்லை

கல்வி நிலையங்கள் திறக்கும் காலம்
பெண்களுக்கான பெட்டியிலும் நெரிசல்

எல்லோர் முகத்திலும்
முன்கூட்டியே வந்துவிட்ட அயர்வு

காத்திருக்கப் பொறுமையில்லாத போதும்
காத்திருந்தேன்

வண்டி
புறப்படும் நேரம் .

என்ன
நினைத்துக் கொண்டிருந்தாளோ இவள்

உதடு துடிக்க
பார்த்துக் கொண்டேயிருந்தான் பெரியவன்

தாடியைப் பிடித்திழுத்து
விளையாடிக் கொண்டிருந்தான் சின்னவன்

வெறுமையை உடைக்கத் தெரியாமல்
யோசித்துக் கொண்டிருந்தேன் நான்

நாளை இந்நேரம்
ஊரில் இருப்பார்கள்

பழகிப்போன தனிமை தானென்றாலும்
பயமுறுத்தத்தான் செய்யும் என்னை.

○ ○ ○

---

**ஆனந்த பிரசாத் கவிதைகள்**

## மௌனத்தின் வழியே

காற்றுக்குக் காதிருப்பதை
நான் கண்டுபிடித்து விட்டேன்
இங்கு நான் புலம்புகையில்
தொலைவில் உரிய காதுகளில்
போய்ச்சொல்லி விடுகிறதே !

இது என்ன Net work?
'அட்லான்டிக்' கில் இருந்து
இந்துமகா சமுத்திரத்தின்
பொசுங்கிய நிலப்பரப்பில்
போயுரைத்த விரைவென்ன?

இந்தச் சமாதிக்கு
எழுதிச் சேராதென்று
அந்தப் பிணங்கள்

கைவிட்ட போதெல்லாம்
இந்தக் காதுகளே
கதைகள் சொல்லின.

அட மூக்கும் இருக்கிறதாய்
இப்போது புலப்படுகிறது
பிண நாற்றம் சுவாசமாகையில்

இந்தக் கல்தூணின்
எஞ்சிய ஈரத்தையும்
உலரச் செய்யவே
காற்று வீசுகிறது.

www.padippakam.com



## ஓட்டம்

ஒழுகிய விந்தின்
கடைசித்துளி உலரமுன்பு
சிலுவைக்கும், சீருடைக்கும்
பயந்துபோய் ஓடிவிட்டேன்

ஆணிகளைத் தூக்கிக்கொண்டு
அவர்கள் துரத்தியும்
அறைய முடியவில்லை
ஒரு எல்லைக்கு மேல் துப்பாக்கிகள்
வலுவிழந்து போயின

ஆணிக்குத் தப்பி விட்டேன்
முள்முடிக்கும் தப்பி விட்டேன்
இராட்சத 'பூட்ஸ்' களுக்கடியில்
இறந்து படாமலும் கூட.
இங்கே—
வான் கோழிச் செட்டைக்குள்
பத்திரமாய், பாதுகாப்பாய்
தொடரும் வாழ்வு.

கனவுகளில் சாப்பாடு
கையோடு தாம்பத்யம்
மனச் சூட்டினின்றும்
பாதுகாத்துக் கொள்ள

ஆசைச் செருப்பை
அணிந்து கொண்டேன்
பொய்யென்று புரியுங்கால்
போதைத் துணையிருப்பு
'டாலர்' சிறகடித்து
பொய்வானை வட்டமிட்டேன்

மலத்துக்குள் திளைக்கும்
வண்டாக—
உருண்டோடும் காலம்.

நாளாக நாளாக
ஆசைகளைத் துரத்திக் கொண்டு
ஆணிகள் மட்டும் வந்தன
ஒவ்வொன்றாய் முதலிலும்
என் உடலின் ஜீவ அணுக்களுக்கு
சமமாக முடிவிலும்

மீண்டும் ஓடவாரம்பித்தேன்
என் சிறகு பிய்ந்துபோய்
செருப்பு அறுந்துபோய்
ஒரு எல்லைக்கு மேல் என்னால்
நகர முடியவில்லை.

உயிரணுக்கள் ஒவ்வொன்றிலும்
ஆணிகளாய் அறைந்தன.

o o o

## அருபன் கவிதைகள்

**1**

மழை மறந்தது வானம்
நீர் நிலம் மறந்தது
முளைத்தது வீடு
வீடு பெருகி காடாக
தொலைந்தது மலர்
மறைந்தன கனிகள்
பறவையும் மறந்து பறந்தது
மழைக்கவிதையை மாந்தரும்
மறந்தார்

பெய்தது மழை
பெருகியது நீர்
பயிராய் முளைத்தன குடைகள்
மழையை மழையாய் பார்க்க
போதித்து ஓய்ந்தது மழை.

**2**

துக்கக் குரலெழுப்பி
தூக்கிப் போனது கூட்டம்
கூட்டமானேன்
என் கனவுகளின் நிறமல்ல அவள்
நினைவாற்றங்கரையில் கை கோர்த்து
நடந்தவளும் வேறொருத்தி
முகமோ தொலைதூரில் தெரிந்தமுகம்

என் சுய இன்பக் காட்டின் கனி தரும்
பெருமரமொன்று வீழ்ந்துவிட்டதற்காய்
கூட்டமாயிருக்கலாம்.

○ ○ ○

---

பாமதி ரவி

## மறுபடி மறுபடி தவறிப்போனேன்

தவறுகள்தான் செய்வேன் என்று எவருக்கும்
நான் ஒப்பந்தம் செய்யவில்லை.
ஓட்டப்பந்தயத்தில் தடுக்கி விழுவேன்
என்று எதிர்பார்க்காத
போட்டியாளன்தான் நானும்.

போர்க்களத்தில் தோல்வியை விரும்பாத
போராளிதான் நானும்.
ஆனாலும் அடிக்கடி தோற்றுத்தான் போனேன்
விரும்பி நடந்தவைகளை ஜீரணிக்க முடியும்
விரும்பாமல் நடந்தவைகள்
ஜீரணிப்பது கடினம்.

என் தோல்விகளுக்கு பரிசு கேட்டு
நான் அழவில்லை

ஆனால் என் தன்னம்பிக்கைக்கு
புதைகுழி வேண்டாம்
என்றுதான் கதறுகிறேன்

அழுது வறண்டு போன என் கண்கள்
அடிக்கடி ஏமாறிப்போன
என் இதயத்துடன் சேர்ந்து கொண்டு
ஒட்டுக் கேட்டது

அதனால்தான் என்னை
இப்போது எவருக்கும்
அடையாளம் தெரிவதில்லை

www.padippakam.com

யாழினி

## எதிர்பார்ப்புக்கள்

இத்தனை ஏமாற்றங்களை
எதிர் கொள்ளவா நாம்
எதிர்காலங்களை துறந்து
இங்கு வந்தோம்

எங்கள் சொந்தம்
எங்கள் கல்வி
எங்கள் நன்மை
எங்கள் பதவி
என இருந்த
சிறு வட்டத்தை அழித்து
பெரிதாய் ஒரு வட்டம்
நாமே வரைந்தது.......

அந்த பெரிதான
வட்டத்தினுள்ளும்
சிறுமைகள் எம்மை
ஏமாற்றினவோ

நண்பா!
மழலை பேசும்
குழந்தைப் பருவம்
தரையில் கிடந்து
தவழும் போதும்
முற்றத்தில் விளையாடி
மகிழும் சிறுவர் கண்டு
ஏங்கியிருந்த எமக்கு...
ஒரு நாள்
அந்த வாழ்வும் வந்து
அணைத்துக் கொண்டது

சிறுவர்களாய்
செருப்பில்லாக் கால்களுடன்
தெருக் கரையால்
நடக்கையிலே
நீளக் கால்ச் சட்டை
நிலம் தாங்கும் சப்பாத்து
நிமிர்ந்த நடை
அண்ணாமார் பலர்
அணிவகுத்துச் செல்லும்...
அதைக் கண்டு
எதிர்பார்த்திருக்க
அந்தக் காலம்
எமக்கு கிட்டி
இதமாய்க் கழித்தோம்
கல்லூரி நாட்களில்
பல்கலைக் கழக வாழ்வு

எம்மனதில் வந்து
நிழலாட
விடாமுயற்சிப் படிகள்
கண்முன் தெரிய
அலைகளில் ஏறி

பட்டப்படிப்பை
எட்டிப் பிடித்தவர்கள் நாம்

எம்மை வரவேற்ற
புதிதான நண்பர்களின்
புதிரான பாடங்கள்
புதிய வழியை காட்டி நிற்க...

நம்மூர்த் தெருக்களிலும்
நம் மண்ணின் எல்லைகளிலும்
சோக கீதங்கள் மறைந்து
சுகமான ராகங்கள்
இசைக்கப்படும் வரை...
பட்டங்கள் என்ன
பலன் தரும் என எண்ணத் தொடங்கி...

புதிய எதிர்பார்ப்புக்களோடு
பழைய சுகங்களை மறந்து
முன் சென்ற
நண்பர்களின் பின்னால்
நடக்கத் தொடங்கினோம்

இத்தனை காலம்
ஓடி மறைந்தும்
எங்கள் கவலைகள்
எதிர்பார்ப்புக்கள் எம்மோடு
ஒட்டியே இருக்க
ஏமாற்றங்கள் மட்டும்
எதிர் கொண்டு...
எதிர் கொண்டு...

எதிரிகள் எம்மை
அழிக்க முன்னரே
எம்மவர் எம்மை
ஒழிக்க வருவதும்

துயரங்களை
மக்களிடமிருந்து பிரிப்பதற்காய்
துப்பாக்கி ஏந்தியவர்கள்
துப்பாக்கிகள் கொண்டு
மக்களையே
துரத்தும் போதும்

இளைய வயதில்
எதிர்பார்ப்புக்களை
அடுக்கடுக்காய்
வெற்றி கொண்டவர்கள்
இப்போது
ஏமாற்றங்கள் எம்மை
எதிர்கொள்ள

இந்தப் பெரிதான
வட்டத்தினுள்ளும்
சிறுமைகள் எம்மை
ஏமாற்றினவோ

www.padippakam.com



# கனடாத் தமிழரும் கனவுகளும்

குமார் மூர்த்தி

(முதல் இதழ் தொடர்ச்சி)

கட்டுரையின் முதற் பகுதியில் குறிப்பிட்டதை விட இன்னும் அதிகமாக தமிழர்கள் மத்தியில் வன்முறைகள் தோன்றியுள்ளதாக பொலிசாரே நம்புகின்றனர். ஏறத்தாழ 99%மான தமிழர்கள் தாமுண்டு தம் வேலையுண்டு என்றிருந்தாலும் இந்த ஒரு வீதமானவர்கள் செய்யும் கலாட்டாக்கள் மொத்தமாக ஸ்ரீலங்கன் என்ற நாமகரணத்துடன் எல்லாத் தமிழர்கள் தலையிலும் சுமத்தப்படுகின்றன.

குற்றச் செயல்களில் ஈடுபடும் இளைஞர்கள் பெரும்பாலும் திருமணம் முடிக்காதவர்களாகவும் வீட்டுப் பொறுப்புக்கள் குறைந்தவர்களாகவும் காணப்படுகின்றனர். இவர்களிற் பலர் நீண்ட காலமாக தாய் நாட்டை விட்டும் இன பந்துக்களை விட்டும் பிரிந்திருப்பதால் உள்ளார்ந்த உளவியல் ரீதியாக பெரிதும் தாக்கத்திற்குள்ளாகியிருக்கின்றார்கள். பெரும்பாலும் இவர்களுக்கு இங்கு நிரந்தர வதிவிட அனுமதியோ (Landed imigrant) அல்லது அதற்கு சமமான ஏதாவதொன்றோ கிடைக்காதபடியால் உறவினர்களைச் சென்று பார்த்து வரவோ அல்லது விரும்பிய பெண்ணை வரவழைத்து வாழ்க்கை நடத்தவோ முடியாமலிருக்கின்றது. பெரும்பாலும் இதனடிப்படையில்தான் பெரும்பாலானவரின் விரக்தி வாழ்க்கை காணப்படுகின்றது. (எந்த நோக்கமும் இல்லாமல் குற்றச் செயல்களில் ஈடுபடும் விரல் விட்டு எண்ணக் கூடிய ஒரு சிலர் தாய் நாட்டிலும் இதையே தொழிலாகக் கொண்டிருந்தவர்கள் என்பது தான் உண்மை, இவர்கள் தங்களின் உள்ளக் கிடக்கைகள்பற்றி கனடிய அரசு அதிகாரிகளுக்கு எடுத்துக்கூறி அவர்களுக்கு புரியவைப்பதற்கு மொழி பெரிதும் தடையாக உள்ளது. அப்படி ஆங்கில மொழி தெரிந்த தமிழ் அறிஞர்களும் தங்கள் தங்கள் சௌகரியங்களுடன் நின்று கொள்கிறார்கள். (வழமையான தமிழ்ப் பண்பாடு) இதனால் இங்குள்ள அதிகாரிகளும் பிரச்சனையின் தீவிரத்தை சரிவரப் புரிந்து கொள்ள முடிவதில்லை. அடுத்து கனடிய குடிவரவுச் சட்டங்களும் குழப்பமானதாகத் தான் காணப்படுகின்றது. நான்கு வருடங்களுக்கு முன் வந்தவர்கள் எதுவித விசாரணையுமின்றி தங்களுக்கு விசா கிடைக்குமா? கிடைக்காதா? என்ற ஏக்கத்துடன் வாழ்கின்றனர். அதே நேரத்தில் நான்கு மாதங்களுக்கு முன் வந்தவர் சகல பத்திரங்களும் பெற்று இருக்கிறார்; இருவரும் ஒரே நாட்டில் ஒரே ஊரில் இருந்து வந்தவர்களாகவும் இருக்கலாம். சரியான தகவல்களின் அடிப்படையில்தான் விசா வழங்கப்படுவதாக அதிகாரிகள் தரப்பில் கூறப்படுகின்றது. ஆனால் வடக்கு கிழக்கு பகுதிகளைப் பார்த்தும் அறியாத வசதியுள்ள கொழும்பு வாழ் தமிழர்கள், மலேசியத் தமிழர்கள், (இவர்கள் யாழ்பாணப் பிறப்பிடம் ஆனால் இரண்டு தலை முறையாக வாழ்பவர்கள்) இந்தியாவிலுள்ள ஈழத் தமிழர் (இவர்கள் பிரச்சனைகள் தொடங்கு முன்பே இந்தியா வந்துவிட்டவர்கள்) ஆரம்பத்திலேயே ஐரோப்பிய நாடுகளுக்கு வந்த தமிழர் போன்றவர்கள் உடனடியாக விசா அனுமதி பெற்றுள்ளனர். விசா மறுக்கப்பட்டு உள்ளவர்களும் விசாரணை கிடப்பில் (Pending case) போடப்பட்டுள்ளவர்களும் பெரும்பாலும் ஈழத்தில் இருந்து நேரடியாக வந்தவர்களாகத்தான் இருக்கின்றார்கள். உண்மையான காரணம் என்னவெனில் பிரச்சனைகளின் தீவிரத்தால் பாதிக்கப்பட்டு வந்த இவர்களிடம் எந்த விதமான ஆவணங்களும் சரியாக இருப்பதில்லை. எரிந்தும் சிதைந்தும் பெறமுடியாமல் இருப்பதால் அதிகாரிகள் கேட்கும் ஆவணங்களை இவர்களால் சரியான முறையில் சமர்ப்பிக்க முடிவதில்லை. எனவே அதிகாரிகள் பார்வையில் இவர்கள் சந்தேகமானவர்களாகவே தென்படுகிறார்கள். உதாரணத்துக்கு A/L படித்து விட்டு வேலையில்லாது இருக்கும் ஒரு இளைஞனை இராணுவம் சுற்று வளைப்பில் பிடித்துக் கொண்டு போய் பத்து மாதங்கள் முகாமில் வைத்திருந்து விட்டு

www.padippakam.com



திடீரென ஒரு நாள் விடுதலை செய்கிறது. (அதுவே பெரிய காரியம்—பல பேர் திரும்பி வருவதில்லை)பீதியடைந்த பெற்றோர் எவ்வளவோ சிரமங்களுக்கு மத்தியில் கனடாவுக்கு அனுப்பிவைக்கின்றனர். பாதிக்கப்பட்டது எந்தளவு தூரத்துக்கு உண்மையோ அந்தளவு தூரத்துக்கு அவனிடம் ஆவணங்கள் இல்லை. இதனால் அதிகாரிகள் இவன் பேச்சில் திருப்தியடைவதில்லை. தவிர இந்த வட்டாரங்களில் வேலை செய்யும் தமிழ் மொழிபெயர்ப்பாளர்கள் தொழில் முறை அனுபவம் பெற்றவர்கள் இல்லாதபடியால், அந்த இளைஞன் தன்னுடைய உண்மையான ஆதங்கத்தை அதிகாரிகளுக்கு வெளிப்படுத்த முடியாமல் போகிறான். எனவே இவனுடைய வேதனையும் விரக்தியும் அன்றாடம் சிறு சிறு தோற்றங்களாக வெளிப்படுகின்றது. தாய் நாட்டில் பாடசாலை வாழ்க்கை முடித்து பல் கலைக்கழகமோ அல்லது வேலை வாய்ப்பு தேடும் படலமோ எதுவாகிலும் பெற்றோர் உற்றோர் நண்பர் மத்தியிலும் பெயர் தெரிந்த தெரியாத பெண்கள் மத்தியிலும் அவனின் வாழ்க்கை ஒரு இனம் புரியாத இன்பமயமான எதிர் நீச்சலாகவே இருக்கும். இளமையின் வேகங்களும் வெளிப்பாடுகளும் பல கோணங்களில் இருக்கும். (போராட்ட சூழலும் பல இளைஞர்களை மாற்றியிருக்கிறது) இதை விடுத்து முற்றிலும் வேறுபட்ட ஒரு அமைப்புக்குள் அவன் வாழ முற்படும் போது பல பிரச்சனைகளை எதிர் நோக்குகிறான். பெரும்பாலும் வயதிற் குறைந்த இளைஞர்களின் நிலை இந்த அமைவிலேயே காணப்படுகின்றது.

## கலை இலக்கிய அரசியல் வாழ்வு

இதுவரையில் இங்குள்ள தமிழர்கள் அரசியற் கட்சி அமைத்துச் செயற்படவில்லை. இங்குள்ள அரசியற் தன்மைகள் எப்படி, பிரதான கட்சிகள் எதை முன் வைக்கின்றன, போன்ற கனடிய அரசியலை மிக மிக குறைந்த வீதத்தில் உள்ளவர்களே தெரிந்து வைத்துள்ளனர். மற்றவர்களெல்லாம் கனடா வந்து இறங்குவது மட்டும் தான் தங்கள் பொறுப்பு மிகுதி எல்லாம் அரசாங்கம் பார்த்துக் கொள்ளும் என்கிற பாணியில் காலத்தை ஓட்டுபவர்களாகவே உள்ளனர். கனடியச் சட்ட விதி முறைகளில் இருந்து தாங்கள் விலக்குப் பெற்றவர்கள். ஏனென்றால் ''அகதிகள்'' என்று நினைத்துக் கொள்ளும் சிலரும் இருக்கிறார்கள். ஏதோ, திருப்பி அனுப்பாமல்விட்டால் அது ஒன்று போதும் என்பது மாதிரி. ஆனால் உள்ளுக்குள் பல கட்சிகளாகப் பிரிந்து செயற்படுகின்றார்கள். பெரும்பாலும் ஈழ விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் இயக்கங்களுக்கு ஆதரவாகவே இவர்கள் இங்கு செயற்படுகின்றனர்.

விடுதலைப் புலிகளுக்கு சார்பாக உலகத் தமிழர் இயக்கம் எனும் அமைப்பு செயற்படுகின்றது. மற்றைய போராட்ட குழுக்களுக்கும் இங்கு சிறுசிறு தொகையினர் ஆதரவாக உள்ளனர். இவர்கள் எல்லாரும் தொலை பேசிச் செய்திச் சேவைகள் நடத்துகின்றனர். தங்களுக்கு சார்பான செய்திகளைத் தான் கூறினாலும் பெரும்பாலும் செய்திகளை அறியக் கூடியதாக உள்ளது. ரொறன்ரோவில் உலகத் தமிழர் இயக்கத்தால் ''தமிழ்ச் சோலை'' எனும் வானெலி நிகழ்ச்சியும், மொன்றியலில் தமிழர் ஒளி நிறுவனத்தால் ஒரு வானொலிச் சேவையும் நடைபெறுகின்றது. இது தவிர இடைக்கிடை தொலைக்காட்சி நிகழ்ச்சியும் நடைபெறுகின்றன. மொன்றியலில் ஈழத் தமிழர் ஒன்றியம், தமிழர் ஒளி, உலகத் தமிழர் இயக்கம். தேடகம் என்ற அமைப்புக்கள் இயங்கி வருகின்றன. பொதுவாக இவர்கள் எல்லோரும் போட்டி மனப்பான்மையில் தான் இயங்குவது வெளிப்படையாக தெரிந்தாலும், நூல் நிலைய வசதி, வகுப்பு (கற்பித்தல்) வசதி என சமூக சேவைகளும் செய்கின்றனர். ரொறன்ரோவிலும் உலகத் தமிழர் இயக்கமும் தேடகமும் நூல் நிலையமும் வாசக சாலை வசதிகளைக் கொண்டுள்ளது. இந்த அமைப்புக்கள் ஊர்வலம், உண்ணாவிரதம், தென்னிந்திய கலைஞர்களை வைத்து கலை நிகழ்ச்சிகள், உள்ளூர்த் தயாரிப்பு நாடகம், நடனம், தமிழர் விழா போன்றவற்றை நடத்துகின்றன. பெரும்பாலான நிகழ்ச்சிகள் உலகத் தமிழர் இயக்கத்தின் சார்பில் நடத்தப்படுவது குறிப்பிடத் தக்கது. ஏனைய நிகழ்ச்சிகளைவிட தென்னிந்திய கலைஞர்களின் நிகழ்ச்சிகளுக்கு மக்கள் முட்டி மோதுகின்றனர் (தமிழ்ப்பற்று). நிகழ்ச்சிகள் என்னது உன்னது என்கிற புடுங்குப்பாடுகள் பெரும்பாலும் காணப்படும். ஆனால் மிக சிறிய தொகை மக்களே நிகழ்ச்சிகளுக்கு சென்று வருகின்றனர். பல பேர் வேலையும் வீடுமாக வாழ்க்கையை ஓட்டுகின்றனர். ''ஒற்றுமை'' என்ன விலை என்று ஈழத்தில் ரூபாவிற்கு கேட்

www.padippakam.com



பார்கள். இங்கே டாலரில் கேட்பார்கள். அவ்வளவுதான் வித்தியாசம். நானா நீயா என்கிற கோதாவில் இருட்டடியும் மிரட்டல்களும் அவ்வப் போது அரங்கேறுவதுண்டு. அடுத்து கணணி முறையில் பதிப்பிக்கப்பட்ட பல பத்திரிகைகள் தற்போது வெளிவரத் தொடங்கியுள்ளன. பார்வை, தமிழ் எழில், உலகத் தமிழர், தாயகம், தேடல், நிழல், நேர்மை, வீணைக் கொடி, தமிழ் அரசு, செந்தாமரை, நாயகன், போன்ற பத்திரிகைகள் உள்ளன. சிலது நின்று விட்டது, சிலது திடீரென வரும். மற்றப்படி ஒரு வருடமாக வாரா வாரம் வெளிவரும் செய்திப் பத்திரிகை தாயகம் ஒன்றுதான். இதில் உள்ளூர் படைப்பாளிகளின் ஆக்கங்கள் பிரசுரிக்கப் படுகின்றன. மற்றபடி சகல தென்னிந்திய மாத வெளியீடுகளும் இங்கு பெற்றுக் கொள்ளலாம். இருந்தும் என்ன? இங்குள்ள தமிழர்களுக்கு வாசிக்கும் பழக்கம் மிக மிக அரிதாகவே காணப்படுகின்றது.

அதிகாலையில் எழும்பி அவசரமாக வேலைக்குப் போய் மாலை மங்கிய பின் வீடு வந்து குளித்து சமைத்து தொலை பேசியுடன் அரட்டையடித்து (தொலை பேசி கட்டணம் இலவசம்) படம் பார்த்து (பொதுவாக எல்லார் வீடுகளிலும் டெக் டீவி உண்டு; சகல தமிழ் கடைகளிலும் படக் கசெட்டுகள் எடுக்கலாம்) சாப்பிட பத்து மணிக்கு மேலாகிவிடும் (இந்த ஒரு நேரம் தான் ஒழுங்காக சாப்பிடுவது. மதியத்தில் வேலைத் தலத்தில் பானும் சிற்றுண்டியும் கடித்துக் கும்பிக் கொதிப்பை ஆற்றிக் கொள்வார்கள்) மறு நாள் காலையில் வேலைக்கு எழும்ப வேணுமே என்று நினைத்தவுடன் ஈரல் குலையில் சுரீர் சுரீர் என்று குத்தும். அப்புறம் வாசிப்பதற்கு நேரம் எங்கே! அவசரமாகப் படுத்து............ காலையில் அவசரமாக எழும்பி............

நல்ல தரமான படைப்பாளிகள் பலர் இங்கும் இருக்கிறார்கள். பத்திரிகை வெளியீட்டு சிரமத்தாலும் வெளியிட்ட பத்திரிகைகளுக்கு வாசகர்களின் ஊக்கம் போதாமையாலும் இவர்களின் திறமையை வெளிக் கொணர முடியாத பரிதாப நிலை காணப்படுகின்றது. தவிர வாத்தியக் கலைஞர்கள், நாடகக் கலைஞர்கள், இசைக் கலைஞர்கள் பலரும் இருக்கின்றார்கள். இவர்கள் ஒன்று கூடி ஒரு முயற்சியைச் செய்வது பெரிதும் சிரமமாக உள்ளது. ஏனெனில் நேரப் பிரச்சனையும் பொருளாதாரப் பற்றாக்குறையும் தான் காரணம். அப்படி இருந்தும் சிரமங்களுக்கு மத்தியில் ஒரு சில நிகழ்ச்சிகளை வெளிக் கொணருவது காணக் கூடியதாக உள்ளது. இலக்கிய வட்டங்கள் இலக்கிய சந்திப்புக்கள் என்று ஐரோப்பிய நாடுகளில் தமிழர்கள் செய்வது போல் இங்கு யாரும் செய்வதாக தெரியவில்லை.

அதற்கு நேரப் பிரச்சனைகள் இருந்தாலும் அதையும் மீறி நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளத் தயாராக இருக்கிறார்கள். ஆனால் எந்தப் பார்ட்டி இந்த நிகழ்சியை நடத்துகிறது என்கிற கேள்வி — இதற்குப் போனால் அடுத்த பார்ட்டிகள் தங்களை எதிர் புரட்சியாளர்கள் என்று முத்திரை குத்திவிடுமே! என்கிற பயம் (ஊருக்கு வா கவனித்துக் கொள்ளுகிறோம் என்று சொல்வதும் உண்டு). நம் சொந்த பந்தங்களெல்லாம் இங்கு வந்து விட்டார்கள். நாம் இனி ஊருக்கு (ஈழத்துக்கு) போகப் போவதில்லைத் தானே என்கிற இறுமாப்பு (பெரும்பாலும் இந்த எண்ணம் கொண்டவர்கள் ஈழத்தில் இருந்து நேரடியாக வராது வெளியிடங்களில் இருந்து வந்த தமிழர்கள்). இப்படியாக தமிழர்கள் பலவாறு பிரிந்து கிடப்பதால், எந்த நிகழ்ச்சிகளையும் வெற்றிகரமாக நடத்த முடிவதில்லை. அண்மையில் (30-6-90) தற்போது ஈழத்தில் நடக்கும் படுகொலைகளை நிறுத்துமாறு கோரி ஒரு பகுதியினரால் மௌன ஊர்வலம் ஒன்று நடத்தப்பட்டது. அதை ஒழுங்கு பண்ணியவர்களுடன் பேசிய பொழுது தங்களுக்கு இது மிகப் பெரிய வெற்றி என்று மார் தட்டிக் கொண்டார்கள். அந்தோ வந்தவர்களோ 300—350 வரையான ஆட்கள்தான். தாங்கள் 100 பேரைத்தான் எதிர்பார்த்தோம் இவ்வளவு பேர் வந்தது பெரிய வெற்றி தானே என்றார்கள் அந்த அமைப்பாளர்கள். இதில் வேடிக்கை என்னவென்றால், அந்த ஊர்வலம் தொடங்கப்பட்ட கால் மைல் சுற்றாடலில் கிட்டத்தட்ட 3000 தமிழர்கள் மாடிக்கட்டிடங்களில் வசிக்கிறார்கள். ஊர்வலம் போகும் போது வெளியில் நின்று புதினம் பார்த்தவர்களையும் தங்களுக்குள் பேசிச் சிரித்துக் கொண்டவர்களையும் ஏராளமாக காணக் கூடியதாக இருந்தது. இவர்கள் வேற்று நாட்டவர்கள் என்று நினைக்க வேண்டாம். எல்லோரும் சுத்தமான பனங் கொட்டைத் தமிழர்கள் தான். இதுதான் உண்மையான நிலமை. ஆனால் இந்த ஊர்வலத்துக்கு ரொறன்ரோ பொலிசார் பெரிய மதிப்புக்

www.padippakam.com



கொடுத்து, நிகழ்ச்சி முடியும் வரைக்கும் கடமையில் ஈடுபட்டதையும், பல வெளி நாட்டைச் சேர்ந்தவர்கள், இங்குள்ள பாராளுமன்ற உறுப்பின் இன்னும் சில நலன்புரி அமைப்புகளை (கனடியா) சேர்ந்தவர்களும் பங்கு பற்றியதைக் காணக் கூடியதாக இருந்தது. தவிர இங்கு பல சங்கங்கள் இருக்கின்றன. அத்தனையும் தமிழர்களால். தமிழர்களுக்கு சேவை செய்ய உருவாக்கப்பட்டவைகள். இவைகளின் பெயர்களை நான் எழுதவில்லை. ஏனெனில் இன்றிருப்பது நாளை இராது. (பின்பு புதிதாக ஒன்று முளைத்திருக்கும்). ஒரு சில உண்மையான சேவை மனப்பான்மையுடன் இயங்கும் சங்கங்களை காணக் கூடியதாக உள்ளது. மற்றபடி 1983க்குப் பின் வந்த மேல் மட்டத்து அறிவு ஜீவித் தமிழர்கள், தாங்கள் தலமை வகிப்பதற்கு ஒரு சங்கம் தேவை என்பதற்காக அமைக்கப்பட்டவைகள்தாம். இங்கு சட்டப்படி சங்கம் அமைப்பதற்கு எந்த தடையும் இல்லை. பல் கலாச்சாரச் (Multi Cultural) சட்டத்தின் கீழ் முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது.

எந்த ஒரு சமூகத்துக்கும் தங்களின் மத, கலாச்சார உணர்வுகளை ஏனைய சமூகங்களையோ, மதங்களையோ புண்படுத்தாத வகையில், வன்முறை சாராத வகையில் வெளிப்படுத்தும் உரிமைகளை கனடிய அரசும் அவ்வவ் மாநில அரசுகளும் வழங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது. இதை விட நிதியுதவியும் கூட அரசு செய்கின்றது. வானொலி தொலைக் காட்சி நிறுவனங்களும் அலை வரிசையை ஒதுக்கிக் கொடுக்கின்றன. ஆனால் தமிழர்களைப் பொறுத்தவரையில் இதை துஷ்பிரயோகம் செய்யும் நிலைதான் கூடுதலாக காணப்படுகின்றது. போட்டி சங்கங்கள் அமைத்து அரசிடம் காவடி எடுப்பது, ஒன்றுக்கொன்று கோள் சொல்லுவது. இதனால் சில வேளைகளில் கொடுத்த நிதியையும் நிறுத்தி அதிகாரிகளும் குழப்பம் அடைந்துள்ளனர். ஒற்றுமையாக வாருங்கள், அரசிடம் சலுகை உண்டு என்று கூறுகின்றனர். காணி வழக்கு, எல்லை வழக்கு என்று தமிழர்களுக்கு இல்லை. ஆனால் ஒரு சில அடிதடி கத்தி குத்து, போதை வஸ்து வழக்குகள் உண்டு. கணிசமான அளவு விவாகரத்து வழக்குகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அடுத்து இங்கு ஒரு தமிழ் இளைஞர் குழாம் இயங்குகின்றது. யாருடைய வீட்டுக்காவது தொலை பேசியை எடுத்து மறு முனையில் தமிழ்ப் பெண் குரல் ஹலோ என்றதும் (சிறுமியா குமரியா கிழவியா என்று அவர்களுக்கு கவலையில்லை) பச்சைத் தூஷண வார்த்தைகளால் பேசி ''வாரியா'' என்று கேட்பதும் முத்தம் பொழிவதும் நடக்கும். பின் மறு முனை அமுங்கிவிடும். பிள்ளைகள் பராமரிப்பு, வீட்டு வேலைச் சுமை, தொழிற்சாலைச் சுமை என்று அன்றாடம் அல்லல்பட்டுக் கொண்டிருக்கும் இந்தப் பெண் ஜென்மங்களுக்கு இப்படியும் ஒரு தலை பாடு. அதிலும் கணவன் கொஞ்சம் சந்தேகப் பேர்வழியாயிருந்தால் அவ்வளவு தான். வாழ்க்கையே நரகமாகி விடும். இந்த தொல்லை பேசி நிபுணர்களை உடனடியாக கையும் மெய்யுமாகப் பிடிக்கலாம். அதுவும் நடந்து கொண்டிருக்கிறது. இன்னும் சிலர் கடைகளுக்கு சென்று (Super Market) சிறு சிறு பொருட்களைத் திருடுவதும் சில வேளைகளில் மாட்டுப்படுவதும் நடைபெறுகின்றன. இன்னும் சில இளைஞர்கள் ஏஜென்சி நடத்துகிறேன். ஆட்களைக் கூட்டி வருகிறேன் பேர் வழி என்று பலருடைய பணத்தை ஏப்பம் விட்டுப் பின் தலைமறைவாக உள்ளனர். இப்படி உதிரி உதிரியான சமூகக் குற்றங்களும் குறிப்பிடத்தக்க அளவு இடம் பெறுகின்றன.

கனடா நாட்டின் பொருளாதாரத்திலும் சிறு தளம்பல் ஏற்பட்டுள்ளதாக நிபுணர்கள் கூறுகிறார்கள். ஏப்ரலில் 7.2 ஆக இருந்த வேலையின்மை வீதம் (Unemployment Rate) மேயில் 7.6 ஆக அதிகரித்துள்ளது. இக் காலப் பகுதியில் 45,000 தொழிலாளர்கள் வேலையிழந்துள்ளனர். பல தமிழர்களும் வேலையிழந்து காப்புறுதிப் பணம் unemployment insurance benefit) பெற்றுக் கொண்டிருக்கின்றனர். பொதுவாக முன்பெல்லாம் பாரிய ரொறன்ரோ நகரில் நிறைய வேலை வாய்ப்புக்கள் இருக்கும். தற்போது மிகக் குறைவாகவே காணப்படுகின்றது. தமிழர்களைப் பொறுத்த வரையில் இது பாதிப்பான விடயம்தான். ஏனெனில் தமிழர்கள் அரசாங்க உத்தியோகத்திலோ, பாரிய கூட்டு நிறுவனங்களிலோ வேலை செய்வது விரல் விட்டு எண்ணலாம். மற்றப்படி எல்லோரும் அன்றாட கூலிகளாகவும் எடுபிடி (General Help) களாகவும் தான் உள்ளனர். (கொஞ்சப் பேர் தான் திறன் வேலை (Skil Job) செய்கின்றனர்). இந்தப் பொருளாதார நெருக்கடியில் சிறிய நடுத்தர தொழிற்சாலைகள் பலவும் மூடப்பட்டும், வேறு மாநிலங்களுக்கு நகர்த்தப்

பட்டும் வருவதால் வேலையின்மைப் பிரச்சனை அதிகரித்து வருகின்றது. மொன்றியலிலும் இதே நிலைதான். அரசு நிறுவனங்கள் பாரிய தொழிற் சாலைகளில் தமிழர்கள் வேலை பெற முடியாதுள்ளதற்கு காரணம், விசா இன்மை (States Problem) தொழில் அனுபவம் தேர்ச்சி (Diploma Experience) இன்மை. சரளமாக ஆங்கிலமோ, பிரஞ்சோ தெரியாமை போன்றவையாகும்.

கனடிய வங்கி (Bank of Canada) தனது வட்டி வீதத்தை உயர்த்தியிருப்பதால் புதிய தொழில் முனைவோரின் முயற்சி மந்தமாக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவுக்கும் கனடாவுக்கும் ஏற்பட்ட வர்த்தக (Free Trade) உடன்படிக்கையால் பல தொழிற் சாலைகள் அமெரிக்காவுக்கும் மெக்சிகோவுக்கும் நகர்ந்துள்ளன. இங்கு வரிச்சலுகைகளும் குறைந்த வீத வங்கிக் கடனும், குறைந்த சம்பளத்தில் தொழிலாளர்களும் கிடைக்கக் கூடியதாக உள்ளது. ஹொங் கொங், கிழக்கு ஐரோப்பா, லத்தீன் அமெரிக்கா போன்ற நாடுகளில் இருந்து ஏராளமான மக்கள் கனடாவுக்குள் வந்து கொண்டிருப்பதால், தொழிலாளர் தொகையும் திடீரென அதிகரித்துள்ளது. யப்பான், கொரியா, தாய்வான், அமெரிக்கா போன்ற நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யும் பொருட்களோடு (விலை மலிவு) இங்குள்ள உற்பத்தியாளர்கள் போட்டி போட முடியாமையினால் அவதியுறுகின்றனர். முன்பு கனடிய வர்த்தகம் அத்திலாந்திக் கடல் ஊடாக இருந்ததால் ரொறன்ரோ முக்கியத்துவம் உடையதாக இருந்தது. அதனால் தமிழர்கள் இங்கே குவிந்தார்கள். இப்போது கனடா வர்த்தகம் பசுபிக் கடலூடாக நடைபெறுவதால் வன்கூவர் (Vancovar) முக்கியத்துவம் பெறுகிறது. வன்கூவரில் தொழில் வாய்ப்புக்கள் மிக மிகக் குறைவானபடியால் அங்கு செல்ல தயக்கம் காட்டுகின்றனர். இந்தக் காரணங்களும் உயர்ந்து வரும் வாழ்க்கைச் செலவும் தமிழர்களை பீதியில் உறைய வைத்துள்ளது.

அரசாங்கத்தின் சுதந்திர வர்த்தகக் கொள்கை தான் இதற்கு காரணம் என்று எதிர்க் கட்சிகள் அரசைக் கடுமையாக சாடுகின்றன. இந்த மந்த நிலை ஓரிரண்டு வருடங்களுக்குள் நீங்கிவிடுமென அரசு தரப்பில் கூறப்படுகின்றது.

## கனடாவிலும் நிறவெறியா?

தொடர்ச்சியாக கறுப்பின மக்கள் மேல் பொலீஸ் நடத்தி வரும் துப்பாக்கி சூட்டு சம்பவத்தால் கறுப்பின மக்கள் கொதிப்படைந்துள்ளனர். பொலிசையும் அரசையும் குற்றம் சாட்டும் இந்த கறுப்பின தலைவர்கள் (Black Community Leaders) கனடாவின் முன்னேற்றத்துக்கு முன்னூற்றைம்பது ஆண்டு காலம் உழைத்த தங்களை ஏமாற்றிவிட்டதாக கூறுகின்றனர். இது குற்றச் செயல்களுக்கெதிரான நடவடிக்கையே தவிர இனவாதமல்ல என பொலிசார் கூறியுள்ளனர். ஆண்டாண்டு காலமாக கனடாவின் மேற்குப் பகுதியான வன்கூவரை ஒட்டியுள்ள பகுதிகளில் இனவாதம் தீவிரப்பட்டுள்ளது. 1800ல் சீனக் குடிகளுக்கும் 1900 தொடக்கத்தில் சீக்கியக் குடிகளுக்கும் 1950க்குப் பின் யப்பான் குடிகளுக்கும் எதிராக வன்முறைகள் நடந்துள்ளன. White Aryan Resistance Movement எனும் ஒரு இயக்கம் இதனைச் செய்வதாகவும் ''வெள்ளையர் பெருமை'' ''கனடாவை வெள்ளையருக்கு பிரகாசமாக வைத்திரு'' போன்ற சுவரொட்டிகளை ஒட்டுவதாகவும், இவர்கள் நடத்தும் பத்திரிகையில் ஆசிரியர்களும் யூதர்களும் கனடாவைக் கைப்பற்றத் திட்டம் போட்டுள்ளதாகவும் எழுதியுள்ளதாக பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அண்மையில் who is minority என்ற பதத்துடன் சுற்றி வர சீக்கியர், ஆசியர், கறுப்பர், மங்கோலியர் நிற்க நடுவில் வெள்ளையர் கூனிக் குறுகி நிற்கும் Batch ஒன்று ஒரு கம்பனியால் தயாரிக்கப்பட்டு விற்கப்படுகிறது. கறுப்பு—வெள்ளை ஆங்கில-பிரென்சி, சீக்கியர்—கனடியர், அகதிகள்—கனடியர் என்ற வேறுபாடுகள் வேகமாக வளரத் தொடங்கியுள்ளன. விலைவாசி ஏற்றத்துக்கும் வீடு விலையேற்றத்துக்கும், வேலையில்லாத் திண்டாட்டத்திற்கும், அகதிகள் வருகை தான் காரணம் என பல கனடியர்கள் (?) நம்புகிறார்கள். சகிப்புத் தன்மை குறைந்து இனங்களுக்கிடையிலான பதட்டம் அதிகரித்துள்ளதாகவும் கனடிய மனித உரிமை அமைப்பு தனது வருடாந்த அறிக்கையில் கூறியுள்ளது.

இப்போதிருப்பதைவிட பொருளாதார சுமையும் விலையேற்றமும் வேலையின்மையும் அதிகமாயிருந்தால் இன்னும் இருபது வருடத்தில் இங்கும் கலவரங்கள் ஏற்பட இடமுண்டு.

பிறந்த நாட்டில் சொந்தப் படைகளாலும், அன்னியப் படைகளாலும் வெறுப்படைந்து அமைதியையும் சமாதானத்தையும் வேண்டி இங்கு வந்த தமிழர்களுக்கு இங்குள்ள நடப்புக்கள் பெரிதும் கவலையை ஏற்படுத்தியுள்ளன.

www.padippakam.com

For Private Circulation only

Kaalam Tamil Quarterly 2

# தாஸ் தாயெவ்ஸ்கி சிறப்பிதழ்

மனிதனைத் தனது கலையால் புரிந்து கொள்ள முயற்சித்த ஒரு
கலைஞனைப் புரிந்து கொள்ளும் முயற்சியில்

*கல் குதிரை 8*

*பங்கேற்பவர்கள்*

சுந்தர ராமசாமி, எஸ். வி. ராஜதுரை, ச. தேவதாஸ்,
கோபி கிருஷ்ணன், ஆர். சிவகுமார், ராஜ சுந்தரராஜன், நகுலன்,
மாக்ஸ் ஜேக்கப் (பிரமிள்) ஸ்தானிஸ்லாவ் திகாத் (சுகுமாரன்)
கோலாகல ஸ்ரீநிவாஸ், ஜோதி விநாயகம், ஜார்ஜ் ஸ்டைனர்
(பூரண சந்திரன்) எஸ். ஆல்பர்ட், முத்து மோகன்,



தாஸ்தாயெவ்ஸ்கியின் முழு நாவல்

*''மரண வீட்டின் குறிப்புகள்''*

பக்கங்கள் : 240 விலை ரூ : 40/-

தொடர்பு முகவரி :
'வேர்கள்' கலை இலக்கிய அமைப்பு,
12டி, தந்தை பெரியார் சாலை,
நகர் கூறு-7.
நெய்வேலி-607 803.

Printed at Mithila Achchagam, Mylapore, Madras-4.

படிப்பகம்